பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சுடர் 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 32 திங்கட்கிழமை (16-07-2001) தொலைபேசி: 3378 ஒலி: 217

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-2127]

## எதிர்க்கட்சி எம்பிக்கள் ஒன்றுகூடி இன்று பாராளுமன்றத்திற்குள் அத்துமீறி நுழைவர்?

### தென்னிலங்கையில் எந்நேரமும் கலகம்வெடிக்கும் அபாயம்

(கொழும்பு)

பாராளுமன்றக் கட்டடத்திற்கு முன்பாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் இன்று காலை 7 மணிக்கு கூடுமாறு எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கா கேட்டுக்கொண்டுள்ளார்.

ஜனாதிபதியின் பாராளுமன்ற ஒத்திவைப்பு பிரகடனத்தை அடுத்து பாராளுமன்றத்தைக் கூட்டும் அதிகாரம் தனக்கு இல்லையென சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா எதிர்க்கட்சித் தலைவருக்கு அறிவித்திருந்தார்.

இதனை அடுத்து இன்று16ந் திகதி பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தஎதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு எம்பிக்கள், இன்று பாராளுமன்றத்திற்குள் அத்துமீறி நுழைவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்குவசதியாகவே பாராளுமன்ற உறுப்பினர்களை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வீரமக்கள் தினம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் பன்னிரண்டாவது வீர மக்கள் தின இறுதி நாள நிகழ்வுகள் இன்று சிறப்புடன் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வை முன்னிட்டு இன்று பி.பகல் 4 30மணிக்கு நான்காவது அகில உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ● திவ்வியனை ஆஜர்படுத்த படைத்தரப்பு இணக்கம்

# பகிஷ்கரிப்பை இடைநிறுத்துமாறு மாணவர்ஒன்றியம் வேண்டுகோள்

### சுமுகநிலை ஏற்படும் அறிகுறி

(யாழ்ப்பாணம்)

**சிறிலங்கா அரசபடையினரால் கைதுசெய்யப்பட்டு காங்கேசன் தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவன் திவ்வியனை ஒருவார காலத்துக்குள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த படையினர் இணங்கியிருப்பதனால் பாடசாலைக் கல்வியில் பாதிப்பு ஏற்படாவகையில் 18ம் திகதி புதன்கிழமைமுதல் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு பாடசாலைகளுக்கு செல்லுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

**ஒருவாரகால அவகாசத்துக்குள் சாதகமானபதில் கிடைக்காவிடில் மீண்டும் நாடுதழுவிய மாணவர்போராட்டங்கள் முன்னெடுக்கப் படும்.**

யாழ்.பல்கலைக்கழகமாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

51வது படையணியின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் காமினி ஜெசுந்தர அளித்துள்ளவாக்குறுதியைஅடுத்தே பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது:

அந்த வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

[2ம் பக்கம் பார்க்க]

## திவ்வியனை ஒரு வாரத்தில் நீதிமன்றில் ஆஜர்படுத்துவோம்

### மேஜர் காமினி ஜயசுந்தர அறிவிப்பு

(அலுவலக நிருபர்)

படையினரால் கடந்த 2ம் திகதி கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவன் திவ்வியனை இன்னும் ஒருவார காலத்துக்குள் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப் போவதாகவும் அவரைமருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தவிரும்பின் எந்த டாக்டர் மூலமும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தலாம் என்று 51வது படை அணியின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை தடுப்புமுகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள திவ்வியனின்

[8 ஆம் பக்கம் பார்க்க)

## அதிபர் சங்கத் தலைவர் திவ்வியனை பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியனை நேற்று பல்கலைக்கழகமாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளும் வடமாகாண அதிபர் சங்கத் தினரும் நேரில் சென்று பார்வையிட்டனர்.

512வது படை அதிகாரியுடன் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் எஸ் க ஜேந்திரன், பிரதிநிதி பொன் திவாகரன் வடமாகாண அதிபர் சங்கத் தலைவர் க இராசதுரை ஆகியோரே நேரில் சென்று பார்வையிட்டவர்களாவர்.

(வ. பி)

## பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் சுட்டுக்கொலை

(திருமலை)

திருகோணமலை கிண்ணியாய் ஆலங்கேணிப் பகுதியில் நேற்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் கொல்லப்பட்டார்.

சம்பவத்தில் பிரதிப் பொலிஸ் அத்தியேட்சகர் அன்பர்க்கான் லியட்கான்ட் என்பவரே சுட்டுக் கொல்லப் பட்டவராவர். (இ-8)

## இணுவில்வாசிதிருமலையில சடலமாக மீட்கப்பட்டார்

[திருமலை]

திருமலை இந்துக் கல்லூரியின் ஆசிரியர் எஸ். சிவகணநாதன் நேற்று இரவு திருமலை கடற்கரையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட ஆசிரியர் சிவகணநாதன் இணுவிலை பிறப்பிடமாகக் கொண்டவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு மின்வெட்டு அமுலில் இருந்தபோது வெளியில் சென்ற ஆசிரியர் வீடுதிரும்பவில்லையென்று பின்னர் இவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்றும் மேலும் தெரியவருகிறது.

(வ. பி)

## அரசில் இணையமாட்டோம் ரவூப்ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில தான் ஒரு போதும் இணையமாட்டேனென்று முஸ்லிம காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம மீண்டும் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இக்கட்டான நிலையில் அரசு திண்டாடிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் மீண்டும் அரசாங்கத்தில் இணைந்து கொளளுமாறு பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து அழைப்பு விடுக்

(8ம் பக்கம் பார்க்க)

## கல்முனையில்2வதுநாளும் ஹர்த்தால் அனுஷ்டிப்பு

### வன்முறை வெடிக்கும் அபாயம

(மட்டக்களப்பு)

கல்முனை நகரில் இரு முஸ்லிம் மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டித்து நேற்று இரண்டாவது நாளும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கல்முனை. சாய்ந்தமருது. மருதமுனை, கல்முனைக்குடி, மாளிகைக்காடு ஆகிய பகுதிகளில் கடைகள் பூட்டப்பட்டு போக்குவரத்துக்கள் நிறுத்தப் பட்டுசேவைகள் அனைத்தும் ஸ்தம்பிதமடைந்தன.

மணவர்களின் ஆர்ப்பாட்

(8ம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றை கூட்டும் அதிகாரம் எனக்கு இல்லை

### சபாநாயகர் ரணிலுக்கு கடிதம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தடுப்பதற்காகவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பாராளுமன்றத்தை ஒததிவைத்துள்ளாரென்பதை மீளாய்வு செய்வதற்கு தமக்குப் போதிய ஆதாரங்கள் இல்லையென சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா எதிர்க்கட்சிதலைவர் ரணில்

(8ம் பக்கம் பார்க்க)

நடுவே நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கனடாவில் வசிக்கின்ற 29 வயது, ஐந்து அடி 3 அங்குல உயரமுள்ள பூராடம் 3ம் பாதம், கிரக பாவம் அற்ற மணமகனுக்குத் தகுந்த மணமகளை பெற்றோர் எதிர் பார்க்கின்றனர். ஜாதகம், அண்மையில் எடுத்த புகைப்படம் சொந்த முகவரி, தற்போதைய முகவரிபோன்ற முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்
விளம்பர இல- 120,
பே/பா, வலம்புரி; (3339)

# யாழ். பல்கலையை திறக்கக்கோரி கிழக்கில் ஆர்ப்பாட்டங்கள்

(மட்டக்களப்பு)

யாழ்.பல்கலைக் கழகம் உடனடியாக திறக்கப்பட வேண்டும், வடக்கு-கிழக்கு புத்திஜீவிகளின் உரிமைகள் நசுக்கப்படக்கூடாது என்பன போன்ற கோரிக்கைகளை முன்வைத்து கிழக்குப் பல்கலைக்கழக தொழிற் சங்க கூட்டமைப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை அண்மையில் நடத்தியது

கிழக்கு பல்கலைக்கழக நுழைவாயிலில் பெருமளவு விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் ஆகியோர் திரண்டு நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவாக மட்டு தேசிய கல்வியில் கல்லூரி சுவாமி விபுலானந்தர் இசை நடனக் கல்லூரி மட்டக்களப்பு தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றின் மாணவர்களும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்

மேற்படி ஆர்ப்பாட்டங்களை அடுத்து மட்டக்களப் பின் பல பாடசாலைகள் வெறிச்சோடிய நிலையில் காணப்பட்டதாகவும், சிலவற்றில் மாணவர் வரவு வெகு மந்தமாகக் காணப்பட்டதாகவும் மேலும் அறியப்படுகிறது. (க-8)

பகிஷ்கரிப்பை....

யாழ்பல்கலைக்கழக விஞ்ஞான பீடஇறுதிவருட மாணவனும் முன்னாள் மாணவர் ஒன்றிய செயலாளருமான கிருஷ்ணசாமி திவ்வியனைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளமையால் முழுத் தமிழ் சமூகமுமே அரசினது இனவாத அராஜகத்திற்கு எதிராக திரண்டுள்ளனர்

அதேவேளை தமிழ் பேசும் மாணவர்களின் கல்வியைப் பாழடிக்கும்நோக்குடன் மாணவர்களின்மனோ நிலையினை முற்றுமுழுதாக திசைதிருப்பிவிடும் பாலியல் ஆபாச சினிமாத்திரைப்படங்களை தாராளமாக இறக்குமதிசெய்து விநியோகித்து வருகின்றது. பாலியல்ஆபாச படங்கள் சாதாரணமான வீடியோக் கடைகளிலும் பெறக்கூடிய அளவுக்கு அது அரசினால் இலகுபடுத்தப்பட்டுள்ளது அத்துடன்இன்று மாணவர்களின் எதிர்காலத்தினை மண்ணாக்கும் நோக்குடன் கொழும்புவிலையில் புகைக்கும் வஸ்துக்கள் குடிவகைகளை பாதுகாப்பு அனுமதியில்லாமலே தாராளமாக இறக்குமதிசெய்துவிநியோகித்து வருவதற்கான அனைத்துஏற்பாடுகளையும் ஒழுங்குசெய்து கொடுத்து வருகின்றனர் இதுகல்வி பயிலும் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு சிறிலங்கா அரசுசெய்துவரும் மாபெரும் துரோகச் செயல்களாகும்

தனித்துவமும் தன்மானமுமிக்க ஒருஇனத்தை வேரோடு இருந்த இடமே இல்லாது சாய்ப்பதற்கு மிகவும் இலகுவாக கைக்கொள்ளக்கூடிய ஒருநடவடிக்கையாக இருப்பது அமுல்படுத்தப்படவேண்டிய சட்டங்களையும் ஒழுங்குகளையும், தளர்த்திவிடுவதாகும். அதேவகையிலேயே இன்று குடாநாட்டில் எமஇனத்தைச் சீரழிக்க சட்ட ஒழுங்குகள் தாராளமாக தளர்த்தி [Low Less Situation] இருப்பது எம இளம் சமூகத்தினரை சீரழிப்பதற்காகவேயாகும்.

சாதாரணமான குடிவகைகளுக்கு பாதுகாப்பு அனுமதி [M O D] இலகுபடுத்தப்பட்டு பாடப்புத்தகங்கள் வடபகுதிக்கு அனுப்புவது முதல் இங்கு மாணவர்களின் கைகளில் சேர்வதுவரை அனைத்து அனுமதிகளும் அரசினால் கட்டுப்படுத்தி வைக்கப்பட்டிருப்பது எமது தமிழ் மாணவரின் கல்வியை சீரழிப்பதற்காகவே என்பது அனைவருக்கும் தெளிவான விடயமே

இன்று எமது மாணவர் ஒன்றிய செயலாளர்கைதுசெய்து அடித்தும் அவரை விடுவிக்கக் கோரியும் அனைத்துக் கல்விச் சமூகமும் காலவரையறையற்ற பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகிறது ஆனால் இது விடயத்தில் ஸ்ரீலங்காஅரசும் அரசபடைகளும் மௌனம் சாதிக்கின்றமை தமிழ்பேசும் மாணவர்களின் கல்வியைச் சீரழிக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயாகும்.

இவ்விடயத்தில் அரசுஅசமந்தப் போக்கை தொடர்ந்தும் கடைப்பிடிப்பது க.பொ.த உ/த பரீட்சைகள், இரண்டாம் காலாண்டுப் பரீட்சைகள் புலமைப்பரீட்சைகள் என்பவற்றைசீர் குலைப்பதையே நோக்கமாக்கொண்டு செயற்படுகிறது. ஏற்கனவே கல்வி தரப்படுத்தலினாலும் இனவாத பாரபட்ச செயற்பாட்டினாலும், பொருளாதார நடவடிக்கையினாலும் எமதுகல்வியின் ஆணிவேரை பலமாக சிதைத்துவிட்ட அரசு அதே அழிவுகரமான செயற்பாட்டை தொடர்ந்துவருவது கவலை தருவதாகவுள்ளது

இன்று மாணவன் திவ்வியனை நீதிமன்றில் ஆஜர்செய்வதற்கு படைத்தரப்பு பின்னடித்து வருகிறது. அதற்கு காரணம் திவ்வியனிடம் இருந்து ஒப்புவாக்கு மூலத்தினை பெறுவதற்கு இராணுவம் திவ்வியனை கடுமையாக தாக்கி சித்திரவதைப்படுத்தி அவரது உடலில் வெளிப்புற உட்புற காயங்களை ஏற்படுத்தியுள்ளது இதனால் காயங்கள் ஆறிய பின்பே நீதிமன்றில் ஆஜர் செய்யவேண்டும் என கருதுகின்றனர். காரணம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படும் போது உட்புற வெளிப்புற காயங்கள் இருப்பதனைமருத்துவ அறிக்கைகள் தெரிவிக்குமாயின் திவ்வியன் மீது தாம் பலாத்காரமாக சுமத்திய குற்றச்சாட்டை நிருபிக்கமுடியாமல் போகக்கூடுமோ என படைத்தரப்பு கருதுகின்றது.

நேற்றைய தினம் எமது மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள காங்கேசனதுறை தடுப்பு முகாமில் சென்றுபார்த்த போது யாழ் மத்திய கல்லூரி அதிபர் ராஜதுரையும் சென்றிருந்தார். இவர்களுக்கு முன்னிலையிலும் திவ்வியன் தான் எந்த விதமான ஆயுதங்களையும் வைத்திருக்கவில்லை எனவும், தெரிவித்ததுடன் தன்னைமிகவும் கடுமையாகத் தாக்கி சித்திரவதைக்குட்படுத்தினர் எனவும் தெரிவித்திருந்தார் தற்போது தன்னைதெல்லிப்பளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்குட்படுத்தி வருவதாகவும் தெரிவித்திருந்தார் அத்துடன் உடனடியாக நீதிமன்றில் ஆஜர்செய்வதற்கு போதிய ஆதாரம் அவர்களிடம் இல்லாது இருப்பதாகவும் இதனால் பொய்யான சாட்சிகளையும் சான்றாதாரங்களையும் திரட்டுவதில் ஈடுபட்டுவருவதுடன் கண்டும் காணாது போன்று கண்மூடி இருக்கின்றது இம்மாணவர்களின்கல்வி தொடர்ந்தும் பாதிக்கப்படக்கூடாது என்ற காரணத்தினால் பாடசாலை மாணவர்களை அடுத்த புதன்கிழமை தொடக்கம் பாடசாலைக்கு சமூகம் அளிக்குமாறு அன்பாக கேட்டுகொள்கிறோம் இதுவரை நளுடம் நம் வேண்டுகோள் கொடுப்பதற்கு முன்பாகவே ஒரு தமிழ் மாணவனுக்கு சம்பவித்த கோரமான நிலையினைச் சிந்தித்து நீங்களாகவே முன்வந்து எமக்கு அளித்த முழுமையான ஆதரவுக்கு பல்கலைக்கழக சமூகம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது

அத்தோடு எமது தமிழ் இனமும் என்றென்றும் உங்களது ஒத்துழைப்பை நினைவுகூரும் உங்களுடைய ஒத்துழைப்பு எமக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகவே நான் கருதுகின்றோம். திவ்வியனை விடுவிப்பதற்கு தற்போது படைத்தரப்புஒருவார அவகாசம் கோரியிருக்கிறது.

இவ்வார இறுதிக்குள் சாதகமான பதில் கிடைக்காத பட்சத்தில் மீண்டும் நாடு தழுவிய மாணவர்கள் போராட்டம் இன்னும் பல மடங்கு பூதாகாரமாக முன்னெடுக்கப் படும் என்பதனை சம்பந்தப்பட்ட தரப்புக்கு தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறோம் எமது பல்கலைக் கழகத்திற்கு வெளியேயும் விடுதலை கோரி மாணவர்கள் மற்றும் பொது மக்களுடன் இணைந்து வேறுபட்ட போராட்ட வடிவங்களையும் நாம் தேர்ந்து எடுக்கவேண்டுமா என்பதனை அரசபடைகளின் பதில்கள் தான் நிர்ணயிக்கப் போகின்றது அதனால் ஏற்படும்பாதகமான பின் விளைவுகளுக்கு அரசும், அரசப் படைகளும் தான் பொறுப்பேற்க வேண்டும் மீண்டும் நாம் வேண்டுகின்ற போது மக்களும் மாணவர்களும் தமது முழுமையான ஆதரவை வழங்கிதமிழ்இனத்தின் மீதான அரசினதும் அரசப்படைகளினதும் அராஜகத்திற்கு எதிராக திரள வேண்டுமென அன்பாக வேண்டுகின்றோம்; திவ்வியனின் விடுதலைக்கிட்டும்வரை பல்கலைக் கழக மாணவர்களின் பகிஷ்கரிப்பு போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப் படும்.

# சிம்லா ஒப்பந்தத்தை அதிபர் வெறுக்கவில்லை

## பாக். தூதுவர் தெரிவிப்பு

[புதுடில்லி]

சிம்லா மற்றும் லாகூர் ஒப்பந்தங்களை பாகிஸ்தான் அதிபர் வெறுக்கவில்லையென்று பாகிஸ்தான் தூதுவர் தெளிவுபடுத்தியிருக்கிறார்

சில பத்திரிகைகள் பாகிஸ்தான் அதிபருக்கு லாகூர் சிம்லாஒப்பந்தங்களில் நாட்டமில்லையென்று திரிபுபடுத்திக் கூறியிருந்தன.

அவர் அப்படிக்கூறவில்லை, சிம்லா லாகூர்ஒப்பந்தங்களில் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லையென்று மட்டும் அவர் தெரிவித்திருந்தார் என்று தூதுவர் மேலும் விளக்கியுள்ளார்.

பாகிஸ்தான் அதிபர் சிம்லா லாகூர் தொடர்பாக நிராகரிக்கவில்லையென்றும் அவைகள் பற்றி மேலும் பேச்சு தொடரவேண்டும் என்று குறிப்பிட்டாரென்றும் இதனை இந்தியப் பத்திரிகைகள் திரிபுபடுத்திப் பிரசுரித்து விட்டனவென்றும் இந்தியாவுக்கான பாகிஸ்தான தூதுவர் மேலும் தெளிவுபடுத்தியிருக்கிறார். (து)

# ஜெனரல் முஷாரப்பின் சந்திப்பை தவிர்க்கும் முயற்சியில்பெர்னாண்டஸ்

(புதுடில்லி)

பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் முஷாரப் புதுடில்லி வந்துள்ளவேளை முன்னாள் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் வெளிமாநிலத்திற்குச் சென்றுள்ளமை அரசியல் அவதானிகள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

கார்கில் எல்லைக் கோட்டு விவகாரம் தொடர்பாக இந்திய-பாகிஸ்தான் யுத்தத்தின் முக்கிய புள்ளியாக இவர் இருந்ததால் ஜெனரல் முஷாரப்பைச் சந்திப்பதைத் தவிர்த்தாரோ என எண்ணத் தோன்றுவதாக அரசியல் அவதானிகள் மேலும் தெரிவித்துள்ளனர், (க-து)

# உளவியல் ரீதியாக பினோசே பாதிப்பு நீதிமன்றம் தீர்ப்பு

(பேரு)

சிலியின் முன்னாள் சர்வாதிகாரி பினோசே உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டிருப்பதால் நீதிமன்றத்திற்கு வரமுடியாத நிலையில் இருக்கிறார்என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

வழக்கறிஞர்கள் இதுபற்றி கருத்து வெளியிடுகையில் நீதிமன்றக் கூற்றுப்படி வழக்கினை அவரது உடல் நிலை சீராகும்வரை தள்ளிவைக்க முடியும்.

எனினும் முதுமை நிலை காரணமாக அவர் பேசுவாரா என்பதும், நீதிமன்றிற்கு சமுகமளிப்பாரா என்பதும் சந்தேகமென்று தெரிவித்தனர்.

இதேவேளை, சிலியின் தற்போதைய ஜனாதிபதி நிக்காடோ கருதது வெளியிடுகையில் 85 வயதான இவரை முதுமை நிலை, மோசமான உடல் நிலை என்பவற்றுடன் நோக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

முன்னாள் சர்வாதிகாரி பினோசே ஆட்கடத்தல்கள் மற்றும் நூற்றுக்கணக்கான கொலைக குற்றங்களுக்கு உடந்தையானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (து)

# லீசைடன் விரைவில் விடுதலை செய்யப்படுவார்

## சீன நீதிமன்றம் தீர்ப்பு

(பீஜிங்)

சீனாவில் வேவு பார்த்தார் என்ற குற்றத்திற்காக விசாரிக்கப்பட்டுவந்த லீசைடன் விடுவிக்கப்பட இருக்கிறாரென்று சீன நீதிமன்றம் ஒன்றுஇவ்வாறு தெரிவித்துள்ளது

சீனாவின் இந்த முடிவை அமெரிக்கா வரவேற்றிருக்கிறது.

இதே வேளை பீஜிங்கின் ஏற்கனவே பிடிபட்டிருக்கும் அமெரிக்க பிரஜைகளையும் சீனாவிலுள்ள அமெரிக்க நிரந்தரப் பிரஜைகளையும் சீனா விடுவிக்குமென அமெரிக்கா நம்புகிறது.

லீசைடன் தைவானிலிருந்துவந்து சீனாவில் வேவு பார்த்தார் என்றும் அவரை நாடுகடத்தவேண்டும்என்றும மேற்படிநீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. (க-து)

# ஜெய்ப்பூர் நிறுவனம்

## அதிகரித்த கடன்

(யாழ்ப்பாணம)

யு.என் எச் சி ஆர் இன் உதவியுடன் யாழ் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் திட்டத்தினர் தமது அவயவப்பாவனையாளர்களது சுயதொழில் முயற்சிக்காக சுழற்சி முறையிலான அதிகரித்த கடனை வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர்

ஏற்கனவே இக்கடனுதவித் திட்டத்தின்கீழ் விண்ணப்பித்தவர்களுக்கு இன்று காலை 9.30 மணிக்குஇணுவில் வைத்தியசாலைவளாகத்தில இயங்கும்ஜெய்ப்பூர் பணிமனையில் வைத்து இக்கடன் வழங்கப்படும்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பிரதேச செயலர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக்கடனுக்கு விண்ணப்பித்தவர்களை தவறாது சமுகமளிக்குமாறு நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (க)

# ஆட்டுக்கடா கடத்தல்

(தென்மராட்சி)

மட்டுவில் பகுதியில் கட்டாக்காலிகளாகத் திரிகின்ற ஆட்டுக்கடாக்களை அங்குவசிக்கின்ற வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இறைச்சித்தேவைக்காகக் கடத்தி வந்து விற்பனை செய்வதாகத் தெரியவருகின்றது.

மேற்படி பகுதிகளில் நூற்றுக்கணக்கான கால்நடைகள் கட்டாக் காலிகளாக நடமாடி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க-77)

# ஊதாரி மைந்தன் இரண்டாமிடம்

[யாழ்ப்பாணம்]

திருகோணமலையில் நடைபெற்ற மாகாண மட்ட தமிழ்த் தினப் போட்டியில் மெல்ஞ்சிமுனை றோ.க.த.க. வித்தியாலயத்தில் இருந்து பங்குபற்றிய 'ஊதாரி மைந்தன்'' என்ற விசேட கூத்து இரண்டாமிடத்தைப் பெற்றது

இக்கூத்தினை நெறியாள்கை செய்த க. தங்கமலர் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் பாராட்டும் பெற்றார். (க)

# மரத்தால் வீழ்ந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம)

ஓலை வெட்டுவதற்காக பனைமரத்தில் ஏறியவர் மரத்திலிருந்து தவறி வீழ்ந்ததில் மரணமானார்.

நேற்று முன் தினம் சனிக்கிழமை சங்கானையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சங்கானை நிற்சாமத்தைச் சேர்ந்த சி.திருநாவுக்கரசு வயது 65) என்பவரே இவ்வாறு மரணமானவர் ஆவார். (செ-104)

## விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

இளவாலை வசந்தபுரம் பாரதி சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழா அண்மையில் நிலையத்தலைவர் நா. மார்க்கண்டு தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிவடக்கு பிரதேசசபைத் தலைவர் திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் மற்றும் வலிவடக்கு ஈ பி டி பி அமைப்பாளர் வேலு சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ

## கலந்துரையாடல் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடி, தென்மராட்சி மீள் குடியேற்றம் தொடர்பாகஇன்று இடம்பெறவிருந்த கலந்துரையாடல்பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டஅரச அதிபர் க.சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடல் எதிர்வரும19ஆம் திகதி முற்பகல் 10 00 மணிக்கு வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு மாகாண தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சு அலுவலகத்தில் இடம்பெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## பொது மக்கள் கவலை

(செம்பியன்பற்று)

வடமராட்சியின் பலபகுதிகளிலும் பிரதான வீதிகளில, வீதி விளக்குகள் பொருத்தப்படாமையால் திருடர்கள் இருளைத் தமக்குச் சாதகமாக்கிச் செயற்படுகின்றனர் என பொதுமக்கள் கவலை தெரிவித்து வருகின்றனர். (செ-42)

## வருடாந்த உற்சவம்

(வண்ணார்பண்ணை)

சரித்திரப் பிரசித்தி பெற்ற சின்னமடு மாதா தேவாலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

உற்சவ காலத்தின் போது இலங்கை செஞ்சிலுவைச் சங்க ஊர்காவற்றுறைப் பிரிவு அவசர நோயாளர் அம்புலஸ் சேவையினையும் முதலுதவி சேவையினையும் வழமை போல் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (உ-104)

# கல்விச் செயற்பாடுகள் சீர்குலைவு

# புத்திஜீவிகள்குரல்கொடுக்கவேண்டும்

## ஈ. பி. டி. பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளைச் செயலிழக்கச் செய்யும் வகையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு எதிராக கல்விமான்களும்,புத்தி ஜீவிகளும் ஆசிரியர்களும்மாணவர்களும் உரத்துக்குரல கொடுக்கவேண்டும்.

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீடமாணவன் கி. திவ்வியன் படையினரால் கைது செய்யப்பட்டதை அடுத்து யாழ்ப்பாண மாணவரின் கல்வி நிலையில் எழுந்துள்ள நிலைப்பாடு தொடர்பாக ஈ.பி டி.பியினர் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பல்கலைக்கழக சமூகம் என்னும் போர்வைக்குள் இருக்கும் சிலரது நடவடிக்கைகள ஆயுத ரீதியிலான செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்கும்போது பாதுகாப்புப் படையினர் நடவடிக்கை எடுக்க வேண்டியதாகின்றது.

ஆனால் கடந்த காலங்களில் எமது மக்கள் கல்வி வளர்ச்சியைப் பேணுவதில் மிகவும் விழிப்பாக செயற்பட்டுள்ளனர்.

தற்போதைய நிலையில் பாடசாலை மாணவர்களை பகிஷ்கரிப்பில் ஈடுபடுமாறு வற்புறுத்துவதோ அல்லது அரசாங்க திணைக்களங்களினது செயற்பாடுகளை சீர்குலைக்க எத்தனிப்பதோ அமைதியையும் அபிவிருத்தியையும் எதிர்பார்க்கும் மக்களுக்கு எதிர்மாறானதாகும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-5)

## கைதடியில் மீண்டும் முன்பள்ளி

(தென்மராட்சி)

மீளக்குடியேற அனுமதிக்கப்பட்ட கைதடிப்பிரதேசத்தில் அறவழிப் போராட்டக் குழுவின் முன்பள்ளித்திட்டம் மீணடும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கைதடி மத்தியில் இயங்கிவரும் இம் முன்பள்ளியில் தற்போது 35பாலர்கள் பயின்று வருகின்றனர் என்பதுகுறிப்பிடத்தக்கது: [க-77]

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி மு.ப 10 மணிக்கு நடைபெறவுள்ளது [உ-23]

## ஆலயச் சுற்றாடலில் மதுபானச் சாலையா?

## மக்கள் பெரும் அதிர்ச்சி

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் புகழ் பெற்ற பருத்தித்துறை சிவன் கோவிலுக்கு அருகில் மதுபானச் சாலை கடந்த இரு மாத காலமாக இயங்கி வருவது குறித்து அப் பகுதி வாழ் மக்கள் பெரும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இச் செயற்பாட்டால் ஆலயச் சுற்றாடல் பெரிதும் மாசடைவதாசவும் பசதி அலை வீசவேண்டிய புனிதஇடத்தில் சாராய நாற்றம் வீசுவதாகவும் அப் பகுதி மக்கள தெரிவித்துளளனர்.

இதனால் ஆலயத்திற்கு பெண்கள், சிறுமிகள், மாணவர்கள் செல்வதற்குத் தயங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நடவடிக்கை மேற் கொண்டு ஆலயச்சுற்றாடலின் புனிதத்தைப் பேணுவது அவசியம் என்று பலரும் கருதுகின்றனர். (க-104)

## தவறுதலாக ஊசி மருந்து ஏற்றியதால் 11மாத குழந்தை மயக்கம்

(கொழும்பு)

தாய்க்கு ஏற்ற வேண்டிய விசர் நாய்க் கடி தடுப் பூசி மருந்து 11 மாதக் குழந்தைக்கு தவறுதலாக ஏற்றப்பட்ட அதிர்ச்சியான சம்பவம் புத்தளம் வைத்திய சாலையில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; விசர் நாய்க் கடிக்கு உள்ளான பெண் தனது 11 மாத குழந்தையுடன் ஊசி போடச் சென்றபோது ஊசி மருந்துடன் வந்த தாதி குழந்தை சத்தியதை அடுத்து பாதிக்கப்பட்டது குழந்தை எனக்கருதி தவறுதலாக குழந்தைக்கு அந்த ஊசியை ஏற்றிவிட்டர்.

இதனால் மயக்கமடைந்த குழந்தை மூன்று மணித்தியாலங்களின் பின்னரே சுய நினைவிற்கு திரும்பியுளள தாகச் சம்பந்தப்பட்ட வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-3)

## இராசி பலன்

16-07-2001
(ஆனி 32, திங்கள்)
தசமி மு ப 9.26 வரை
கார்த்திகை பி. இ 4 15 வரை
ராகுகாலம்-7 30-9 00
நல்லநேரம்-10 30-12 00
கார்த்திகை விரதம்

**மேடம்**
வாக்கு கலகம், தனவிரயம், முயற்சிபலிதம், மாதர்நட்பு.

**இடபம்**
கற்பனை மிகுதி, நண்பர்கள உதவி, நல்லமுயற்சி, ஜனவசியம்.

**மிதுனம்**
உஷ்ண வியாதி, மனக்குழப்பம், காரிய அலைச்சல், சுப செலவு.

**கடகம்**
நினைத்தகாரியம்கைகூடும், தனலாபம், கௌரவமான நிலை, தொழில்சிந்தை.

**சிங்கம்**
கடினஉழைப்பு, தொழில் வெற்றி, அதிகாரம், சுப நிகழ்வு.

**கன்னி**
பிரயாணம், புதியமுயற்சி, கட்டுப்பாடு, உடல்சோர்வு.

**துலாம்**
எதிர்பாராத பிரச்சினை, மனசுகிலேசம், முயற்சிதடங்கல், நிலைமாற்றம்.

**விருச்சிகம்**
ஸ்திரிபீடை, திடீர்பயணம், கௌரவம், தனவரவு.

**தனுசு**
சுகவாழ்வு, காரியநன்மை, பகைவர்விலகுவர், தனவரவு.

**மகரம்**
தாழ்வுநிலை, வியாபாரச் சிறப்பு, முயற்சிதாமதம், பெரியோர் மதிப்பு.

**கும்பம்**
தாய்வழி உறவு, உறவினர் மனஸ்தாபம், மனக்கிலேசம், காரியதாமதம்.

**மீனம்**
இனிய சம்பவம், தனவரவு, அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## போதைப் பொருள் மீட்பு

(கொழும்பு)

பாகிஸ்தானிலிருந்து விமானம் மூலம் இலங்கைக்கு கடத்தி வரப்பட்ட இரண்டரைக் கிலோ எடையுள்ள ஹெரோயின் போதைப் பொருள கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேற்படி போதைப்பொருளைக் கடத்தி வந்த இருவரையும் கடந்த வியாழக்கிழமை காலை விமான நிலையததில் வைத்து கைது செய்த சுங்க அதிகாரிகள் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரிடம்அவர்களை ஒப்படைத்துள்ளனர். (உ-3)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(தென்மராட்சி)

யாழ்.மாவட்ட கிராம சேவை அலுவலர்கள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இம் மாதம் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது

சங்கத்தின் தலைவர்க. சிவராஜா தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் பங்கு கொள்ளவுள்ளார். (செ-77)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ் திருமறைக் கலா மன்றத்தால்நடத்தப்படும் பாரம்பரிய கலைகள பயிலரங்கிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 22 ஆம் திகதி எனவும் நாட்டுக்கூத்து, இசை நாடகம், கிராமக் கலைகள் தொடர்பான பயிற்சிகள் ஒரு வருடத்திற்கு மன்றத்தால் இலவசமாக வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (செ-104)

## சமாசம் அமைப்பு

(வண்ணார்பண்ணை)

வேலணை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சகல மீன்பிடிச் சங்கங்களையும் ஒன்றிணைத்து பிரதேச மீனவர் சங்கங்களின் சமாசம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மீனவசங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (உ-104)


## யாழ். குடாநாட்டு மின்பாவனையாளர்களுக்கான மின்துண்டிப்பு அறிவித்தல்

மின்பட்டியல்களைச் செலுத்தாமல் இருப்பதனால் பல ஆயிரம் ரூபா இலங்கை மின்சார சபைக்கு எமது பிரதேசத்தில் நிலுவையாக உள்ளது. இதனைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு 2001-05-14ம் திகதி பத்திரிகைகளில் விளம்பரம் செய்தோம்; ஆனாலும் இதற்கான பூரண ஒத்துழைப்பு கிடைக்கவிலலை. நிலுவைகள் கூடுகிறதே தவிரக் குறையவில்லை.

எனவே 2001-07-18ம் திகதியிலிருந்து பட்டியல் நிலுவையுள்ளவர்களது மின் விநியோகத்தைத் துண்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்பதை அறிய த்தருகிறேன் மின்துண்டிக்கப்பட்டபின் முழு நிலுவையும ரூ 500/- துண்டிப்பு நடவடிக்கைக் கட்டணமும் செலுத்தப்பட்டால் மட்டும் மீளிணைப்பு வழங்கப்படுமென்பதையும் அறியத்தர விருமபுகிறேன்.

மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேசம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.

''சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்''
இலங்கை மின்சார சபை.

(C/2219)



## இலங்கை மின்சார சபை யாழ். பிரதேச அலுவலக அறிவித்தல்

மீளவும் மின்னிணைப்புப் பெற விண்ணப்பித்து எனது அலுவலகத்தில் இருந்து கட்டணங்களைச் செலுத்துமாறு அறிவிப்புக் கிடைத்தவர்களுடைய கடிதங்கள் இன்றிலிருந்து காலாவதியாகிவிட்டது. இலங்கை மின்சார சபையின் புதிய அறிவுறுத்தல்களுக்கமைய உங்களுடைய இடங்கள் மீண்டும்பார்வையிடப்பட்டு வேறு கடிதங்கள அனுப்பி வைக்கப்படும். அவற்றில் காட்டப்படும் தொகையினைச் செலுத்தி இணைப்புக்களைப் பெறலாமென அறியத்தருகிறேன்.

சட்டவிரோத மின்பாவனையால் எமக்குப் பெரும் வருமான இழப்பு ஏற்படுகின்றது எனவே அவற்றைத் துண்டிப்பதற்கும் அவ்வாறு மின்சாரம் பெறுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. சட்டவிரோதமாக மின்சாரம் பெறுபவர்கள் சட்ட ரீதியாக மின்சாரத்தைப் பெற்று எமக்கு ஒத்துழைப்புத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிரதேச மின் பொறியியலாளர்
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

''சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்''
இலங்கை மின்சார சபை.

(C/2220)

# நீதிமன்றை அவமதித்த இளம் பெண்ணுக்கு ஒருவார சிறைத்தண்டனை

(மந்திகை)

நீதிமன்றத்தை அவமதிக்கும் விதமாக நடந்து கொண்டதுடன் நீதவானின் பணிப்பின்பேரில் அதனைத் தடுக்க முற்பட்ட பெண் பொலிஸார் இருவரைத் தாக்க முற்பட்ட இளம் குடும்பப் பெண்ணை ஒரு வாரத்திற்கு மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, மேற்படி பெண்ணின் மனநிலை தொடர்பாக உளவளத்துறை நிபுணர் தயா சோமசுந்தரத்தின் பரிசோதனை அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார். (உ-23)

# 12 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலய பாடசாலைகளும் உதைபந்தாட்டச்சங்கமும இணைந்து நடத்தும் 12 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகி எதிர்வரும 25 ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இன்று கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் விளையாடவுள்ள பாடசாலைகளின் விபரம் வருமாறு;

பி.ப 2 45 மணிக்கு வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தை எதிர்த்து ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயமும் பி.ப.3 30 மணிக்கு புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயத்தை எதிர்த்து இடைக்காடு மகாவித்தியாலயமும், பி.ப. 4.10 மணிக்கு தோப்பு அருள்நந்தி வித்தியாலயத்தை எதிர்த்து கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயமும், பி.ப 4 50 மணிக்கு ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியை எதிர்த்து உரும்பிராய் றோ.க.பாடசாலையும் மோதவுள்ளன.

இன்று புனித ஜோன்ஸ் கல்லூரியில விளையாடவுள்ள பாடசாலைகளின் விபரம் வருமாறு;

பி.ப.2.45 மணிக்கு புனித யோசப் வித்தியாலயத்தை எதிர்த்து முத்துத்தம்பி மகா வித்தியாலயமும், பி.ப.3 30 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியை எதிர்த்து நாவாந்துறை றோ.க பாடசாலையும், பி.ப 4.10 மணிக்கு புனித சாள்ஸ்மகாவித்தியாலயத்தை எதிர்த்து கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயமும் பி.ப 4 50 மணிக்கு கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தை எதிர்த்து வைத்தீஸ்வராக் கல்லூரியும் மோதவுள்ளன. (செ)

# இடியன் துவக்கு வெடித்ததில் பலர் காயமடைந்தனர்

## வன்னிப் பகுதியில் சம்பவம்

(வவுனியா)

இடியன் துவக்கு வெடித்து மரணமடைவோர் மற்றும காயமடைவோர் தொகை வன்னிப்பகுதியில் வெகுவாக அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடியன் துவக்கை பொது மக்கள் பயன்படுத்த வேண்டாமென பல தடவைகள் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டும் கூட இது விடயத்தில் பொதுமக்கள் அசமந்தப் போக்கை கடைப்பிடித்து வருவதாக கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழனன்று செல்வபுரம் திருமுறிகண்டிப் பகுதியில் இடியன துவக்கு வெடித்ததில் பொன்னையா நீலகண்டன் (வயது 37) என்ற குடும்பஸ்தர் காயமடைந்து கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை காலை புளியங்குளம் பகுதியில் வேட்டைக்குச் சென்றபோது இடியன் துவக்கு வெடித்ததில் தர்மலிங்கம் சுதுமார் (வயது-23) என்ற இன்னொரு குடும்பஸ்தர் படுகாயமடைந்து மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க- 08)

# மணற்காட்டிற்கு பேருந்து சேவை நீண்டகாலமாக இல்லை

## அப்பகுதி மக்கள் அதிருப்தி

(செம்பியன்பற்று)

பருத்தித்துறையிலிருந்து மணற்காட்டிற்கு குறுந்தூர பேருந்து சேவை நீண்டகாலமாக ஆரம்பிக்கப்படாமை குறித்து அப்பகுதி மக்கள் பெரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

மணற்காட்டுப் பகுதிமக்கள் நீண்டதூரம் கால் நடையாக பயணம் செய்தே தமது அன்றாட தேவைகளை நிறைவேற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இது விடயத்தில் உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் தெரிவித்திருந்தமையும் ஏற்கனவே தெரிந்ததே. (க-42)

[இது அல்லைப்பிட்டி உத்தரியமாதா உற்சவக் கவிதை]

## முழுநிலா ஆடிவரும் முத்தே

முழுநிலவில் ஆடிவரும் முத்தே மாணிக்கமே
அழு குரல்கள் ஓய்வதெப்போ அம்மா—தமுதரலில்
உத்தரிய மாதாவே உன்னை அழைத்தோம்
இத்தரையில் நிம்மதியைத் தா

அல்லையூர் ஏகலைவன்

# வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் சாகித்திய விழா ஏற்பாடுகள்

## உதவி அரசாங்க அதிபர் மேற்பார்வையில்

(புலோலி)

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் சாகித்தியவிழாப் போட்டிகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வி.பி வேலாயுதபிள்ளை மேற்கொண்டுள்ளார்.

இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன போட்டிகள் பாடசாலை மாணவர்களுக்கும் தனியார்களுக்கும் வேறு வேறாக நடத்தப்படவுள்ளன.

சிறுகதைப் போட்டி பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கும் மாணவர்கள் அல்லாதோருக்கும் நடத்தப்படவுள்ளது.

நாடகப் போட்டிகளில் சமூகநாடகம், புராணநாடகம், நாட்டுக்கூத்து என்பன இடம்பெறும்

கிராமியநடனப் போட்டிகளில் கரகம், காவடி, கோலாட்டம், கும்மி என்பன இடம்பெறும்.

வில்லிசை, மெல்லிசை, பக்திப்பாடல்கள், போட்டிகளும் நடைபெறவுள்ளன. மாணவர்கள் பாடசாலை அதிபர்களூடாகவும் ஏனையோர் வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவு கலாசார பேரவையுடனும் தொடர்பு கொள்ளலாமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-52)

# பிரதான ஒழுங்கை திருத்தப் இல்லை

[யாழ்ப்பாணம்]

யாழ் - பருத்தித்துறை பிரதான வீதியிலிருந்து இராச வீதிக்குச் செல்லும் நீர்வேலியின் பிரதான ஒழுங்கை நீண்ட காலமாக திருத்தப்படாமல் இருப்பது குறித்து அப்பகுதி மக்கள் பலத்த அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

ஒழுங்கை திருத்துவதற்கென கற்கள் பறிக்கப்பட்டு நீண்ட நாட்களாகியும் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை.

மழை காலம் ஆரம்பிக்க உள்ளதால் குறித்த ஒழுங்கை விரைவில் திருத்தம செய்யப்பட வேண்டியது அவசியம் என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (க)

# சென். அன்ரனிஸ் வெற்றி

(சுண்ணாகம்)

நெல்லியடி இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் லாலா சோய் ஸ்தாபனத்தின் ஆதரவுடன் நடத்தி வந்த உதைபந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த 8ம திகதி சமரபாகு நியூட்டன் விளையாட்டு அரங்கில கழகத் தலைவர் எஸ். இன்பறாஜன் தலைமையில நடைபெற்றது

இறுதிப்போட்டியில் பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம நெல்லியடி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை பலத்தபோட்டியின் பின 5:4 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது. (உ-110)

# மாதாந்த உதவிப்பணம்

(மந்திகை)

வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோருக்கான ஜூலை மாதக் கொடுப்பனவுகள் கடந்த வெள்ளி முதல வழங்கப்பட்டு வருகின்றன.

புற்றுநோய், காசநோய், பொதுசன மாதாந்த உதவிப் பணம ஆகியவற்றுக்கான கொடுப்பனவுகளைப் பெறுவோர் எதிர்வரும் 25 ஆம திகதிக்கு முன் தத்தமது பிரிவிலுள்ள தபால், உப. தபால நிலையங்ளில் பெற்றுக் கொள்ளலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-23)

# பூச்சிகொல்லி மருந்து விரைவில் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில தென்னைமரங்களைத் தாக்கும் மையிற்-ஐ பீடைக்கு எதிரான பூச்சி கொல்லி மருந்துகள் கிராம சேவையாளர் பிரிவுகளூடாக பொது மக்களுக்கு வழங்கப்படவுள்ளது

மேற்படி பீடைத்தாக்கத்தை இனம் கண்ட தென்னைச் செய்கையாளர்கள் தத்தம் பகுதி கிராம சேவையாளரிடம் தொடர்பு கொண்டுமருந்தைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இதேவேளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள தென்னை மரங்கள் தொடர்பான விபரங்களும் அதிகாரிகளால் திரட்டப்பட்டு வருகின்றன. (க-15)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூலைமாதம் 12 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின படி வெளிமாவட்டங்களுக்குபபயணம செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகினறன.

(நேற்றைய தொடர்ச்சி)

| | |
|---|---|
| 194320 ஏ | 194320 பி |
| 194396 ஏ | 195811 ஏ |
| 195811 பி | 196069 ஏ |
| 196981 ஏ | 196981 பி |
| 196993 ஏ | 197162 ஏ |
| 197162 பி | 197892 ஏ |
| 197902 ஏ | 198017 ஏ |
| 198040 ஏ | 198040 பி |
| 198040 சி | 198161 ஏ |
| 198161 பி | 198161 சி |
| 198678 ஏ | 198678 பி |
| 195679 சி | 198746 ஏ |
| 198913 ஏ | 198924 ஏ |
| 199339 ஏ | 199339 பி |
| 199339 சி | 199339 டி |
| 199339 ஈ | 199339 எப் |
| 199339 ஜி | 199352 ஏ |
| 199357 ஏ | 199433 ஏ |
| 199433 பி | 199493 ஏ |
| 199494 ஏ | 201466 ஏ |
| 201467 ஏ | 201532 ஏ |
| 201565 ஏ | 201584 ஏ |
| 201606 ஏ | 201706 ஏ |
| 201706 பி | 201740 ஏ |
| 201740 பி | 201876 ஏ |
| 201893 ஏ | 201905 ஏ |
| 202228 ஏ | 202228 பி |

தெல்லிப்பழை

| | |
|---|---|
| 184999 ஏ | 185000 ஏ |
| 193567 ஏ | 193567 பி |
| 193567 சி | 193567 டி |
| 194434 ஏ | 194843 ஏ |
| 194843 பி | 194843 சி |
| 195119 ஏ | 201452 ஏ |
| 201593 ஏ | 201730 ஏ |
| 201857 ஏ | 201869 ஏ |

உடுவில்

| | |
|---|---|
| 181460 ஏ | 183818 ஏ |
| 192078 ஏ | 193754 ஏ |
| 194205 ஏ | 194205 பி |
| 196024 ஏ | 197055 ஏ |
| 197055 பி | 197127 ஏ |
| 197127 பி | 197127 சி |
| 197127 டி | 197874 ஏ |
| 198672 ஏ | 198693 ஏ |
| 198693 டி | 198693 சி |
| 198693 டி | 198758 ஏ |
| 198758 பி | 198797 ஏ |
| 198797 பி | 198797 சி |
| 198797 டி | 198797 ஈ |
| 198927 ஏ | 198928 ஏ |
| 198928 பி | 196935 ஏ |
| 119383 ஏ | 199383 பி |
| 199383 சி | 199383 டி |
| 199441 ஏ | 199506 ஏ |
| 199508 ஏ | |
| 199506 பி | 199599 ஏ |
| 199599 பி | 201574 ஏ |
| 201618 ஏ | 201618 பி |
| 201636 ஏ | 201630 ஏ |
| 201650 பி | 201677 ஏ |
| 201728 ஏ | 201729 ஏ |
| 201729 பி | 201886 ஏ |
| 201886 பி | 201394 ஏ |
| 201897 ஏ | 201897 பி |
| 202004 ஏ | 202064 ஏ |
| 202064 பி | |

ஜூலை மாதம் 13 ஆம்திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப்பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

சங்கானை

| | |
|---|---|
| 178691 ஏ | 178691 பி |
| 192334 ஏ | 192334 பி |
| 197888 ஏ | 198704 ஏ |
| 198704 பி | 198704 சி |
| 198704 டி | 198704 ஈ |
| 198704 எப் | 198794 ஏ |
| 198794 பி | 198794 பி |
| 198794 சி | 198877 ஏ |
| 198949 ஏ | 198311 ஏ |
| 199429 ஏ | 199429 பி |
| 199430 ஏ | 199430 பி |
| 199489 ஏ | 199524 ஏ |
| 201588 ஏ | 201749 ஏ |
| 201749 பி | 201749 சி |
| 201811 ஏ | 201818 ஏ |
| 201834 ஏ | 201834 பி |
| 201834 சி | 201853 ஏ |
| 201853 பி | 292094 ஏ |
| 202094 பி | 202094 சி |
| 202095 ஏ | 202114 ஏ |
| 202114 பி | 202114 சி |
| 192133 ஏ | 202133 பி |
| 202138 ஏ | 202138 பி |
| | 202158 ஏ |
| 202158 பி | 202158 சி |
| 202159 ஏ | 203411 ஏ |
| 203411 பி | 203426 ஏ |
| 203442 ஏ | 293442 பி |
| 203448 ஏ | 203448 பி |
| 203457 ஏ | 203458 ஏ |
| 203459 ஏ | 203459 பி |
| 203459 சி | 203470 ஏ |
| 203470 பி | 203493 ஏ |
| 203493 பி | 203530 ஏ |
| 203589 ஏ | |

(தொடரும்)

# கடற்படையினரின் இரத்தப்பசிக்கு அப்பாவி மீனவர் பலியாகின்றனர்

## ரெலோ எம்பிக்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

மன்னாரில் அப்பாவி மீனவர்கள் மீது கடற்படையினர் மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் மற்றும் அடாவடித்தனங்களை உடன் நிறுத்த உத்தரவிட வேண்டுமென்று ரெலோவின் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், விநோதலிங்கம் ஆகியோர் கூட்டாக கையொப்பமிட்டு ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில்;

இலங்கை கடற்படையில் சேவையிலுள்ள சிலரின் இரத்தப்பசிக்கு அண்மைக்காலங்களாக அப்பாவிமீனவர்கள் பலியாகி வருகின்றனர்.

இந்தவகையில் நேற்று முன்தினம் சிலாவத்துறையில் 36 வயதுள்ள 4 பிள்ளைகளின் தந்தையான ஜோசப் குரூசைதாஸன் குரூஸ் என்பவர் பலியாகியுள்ளார்.

இந்த நிலையில் அப்பாவி மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தி அவர்களைக் கொலை செய்யக்கூடாதுஎன கடற்படைக்கு ஜனாதிபதி உத்தரவிடவேண்டும் என்று கேட்டுள்ளனர். (உ-8)

## ✧ இன்று ஒரு தகவல் ✧

# சேரிடம் அறிந்து சேர்

ஒரு மனிதன் உயர்வதற்கும் தாழ்வதற்கும் நட்புத்தான் சிறந்த காரணம் ஆகும். சிறந்த அறிஞர்களுடன் ஆன்றோர்களுடன் பழக வேண்டும். மண்ணுலகில வாழ்கின்ற ஓர் ஈ கயிலாயம் அடைய முடியுமா? அடைந்தாலும் சிவ பெருமானைக் காண முடியும்? சிவ மூர்த்தியைக் கண்டாலும் அவருடைய திருமுடி மீது ஏறிச் சந்திரனுடைய அமுத கிரணத்தை அடைய முடியுமா? ஒரு போதும் முடியாது.

ஒரு தேனீ ஒரு மலரில் அமர்ந்து தேனைப் பருகிக் கொண்டிருந்தது. புஷ்பதத்தன் என்ற ஒரு கந்தருவன் அம்மலரைப் பறித்துக் கொண்டு திருக்கைலாய மலையில் சென்று மாலையாகத் தொடுத்துச் சிவபெருமானுடைய திருமுடியில் சூட்டினான். அம்மலரில் இருந்த தேனீ சிவமூர்த்தியின் முடியின் மீது இருந்த சந்திரனுடைய தண்ணமுதத்தை உண்டது. மண்ணுலகத்து ஈ மலரைச் சேர்ந்ததனால் இந்தப் பெறலரும் பேறு பெற்றது. ஓர் ஈ சாணத்தில் அமர்ந்தது. அதனால் குப்பைத்தொட்டியை சேர்ந்தது ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறைதான் சாந்துயரம் தரும்' என்று திருவள்ளுவர் கூறியிருக்கிறார். ஆகவே மூடர்களின் நட்பு முடிவைத் தரும்.

ஒரு மன்னன் முழு மூடன் ஒருவனுடன் பழகி வந்தான். அந்த மூடனுக்கும் அறிவுக்கும் இடைவெளி ஆயிரம் மைல். அவனுக்கு கைகள், கால்கள், தலை முதலிய எல்லாம் இருந்தன. அறிவு மட்டும் அணுவளவும் கிடையாது. கடவுள் அவனைப் படைத்த போது அறிவைப் படைக்க மறந்து விட்டார் போலும், அந்த மூடன் உழுந்துக்கு நல்லெண்ணெய் தடவியது போன்ற உடம்பும், சப்பை மூக்கும் பூவளைந்த காதுகளும் கோழி முட்டை போன்ற கண்களும் கொண்டிருந்தான்.

அமைச்சர்களும், அரசமாதேவியும் மற்ற ஆன்றோர்களும் அவனை அறவே வெறுத்தார்கள். ஏனோ அரசன் மட்டும் தாம் பருகும் நீரினும், பூங்காற்றினும், உண்ணும் உணவினும் சிறந்த பொருளாக அவனை விரும்பினான். அந்த மூடன் மாணிக்கத்தின் அருகில் மண்ணாங்கட்டி இருப்பது போல, மன்னன் அருகில் நிமிர்ந்து அமர்ந்திருப்பான் அவனுக்கு அரச பக்தி அளவுக்கு மீறி இருந்தது. அரசன் இட்ட ஏவல்களையெல்லாம் செய்வான். வெட்டிக் கொண்டு வா என்றால் கட்டிக்கொண்டு வருவான். அரசனுடைய காலில் பட்டதைத் தன் கண்ணில் பட்டதாக எண்ணுவான்.

நகரில் எங்கேயாவது அரசனை யாராவது இகழ்ந்தால் கடுங் கோபங் கொண்டு சண்டை போடுவான் இகழ்ந்தவரைச் சாடுவான். அரசனுக்கு எது சுகம் என்று தேடுவான் அரசனுடைய ஏவலைச் செய்ய ஓடுவான். இவ்வாறு அவன் இராஜ பக்தியுடன் இருந்தான் ஒரு நாள் பகல் அரண்மனையில் அரசன் தந்தக் கட்டிலில் பஞ்சணையில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தான். இராஜ விசுவாசம் உள்ள அம்மூடன் அரசனுடைய கால் மாட்டில் ஒரு நாற்காலியில் அமர்ந்து பரம ஜாக்கிரதையாகக் காவல் புரிந்து கொண்டிருந்தான்.

அது மாம்பழக்காலம். ஈக்கள் அதிகம், ஓர் ஈ அரசனுடைய கழுத்தில் அமர்ந்தது. இதைக் கண்ட அம்மூடனுக்கு எரிமலை நெருப்பைக் கக்கியது போல் சீற்றம் பொங்கி எழுந்தது ஏ! ஈயே! உனக்கு என்ன திமிர்? நீ சாணியிலும் இருப்பாய் சந்தனத்திலும் இருப்பாய் நீ எங்கே? எங்கள் மன்னர் பெருமான் எங்கே? நீ எங்கள் மன்னர் பெருமானுடைய கழுத்தில் அமர்வது முறையா? இதை நான் பார்த்துக் கொண்டு இருக்கலாமா? இருந்தால் என் ராஜபக்தி என்னவாகும்? உன்னை இப்போதே கண்டித்துத் தண்டித்து மன்னருடைய பெருமையை நிலை நாட்டுவேன்' என்று கூறினான். பல்லை நெறு நெறு என்று கடித்தான் அவனுடைய புருவங்கள் நெறித்தன. கோபத்தால் உதடுகள் துடித்தன. அரசனுடைய அருகில் இருந்த வீர வாளை எடுத்தான் அரசனுடைய கழுத்தில் அமர்ந்திருந்த ஈயை ஓங்கி ஒரே வெட்டாக வெட்டினான். ஈயும், அரசனும் ஒருங்கே மடிந்தார்கள் அவன் அரசன் மீதுள்ள ராஜபக்தியின் காரணமாக நல்ல எண்ணத்துடன் தான் ஈயை வெட்டினான். மன்னன் மாய்ந்தான். மூடர்களின் நட்பு முடிவைத் தரும்.

நன்றி
அறநெறி

# மொறட்டுவ பல்கலையில் தகவல் தொழில்நுட்ப பட்டப்படிப்பு ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் முதன் முதலாக தகவல் தொழில் நுட்ப பட்டப்படிப்பு பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பட்டப்படிப்பிற்கு பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்கள் மற்றும் உயர்தர வகுப்பில் சித்தி எய்தியோர் விண்ணப்பிக்கலாம்.

பயிற்சிநெறிக்கு அடுத்த வாரம் முதல் விண்ணப்பம் கோரப்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 50 பேர் தெரிவு செய்யப்படுவார்கள்.

ஏனையோர் அடுத்தவருடம் பொது உளச்சார்பு பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர். (உ-3)

# தீவக வலயத்தில் 139 தொண்டர் ஆசிரியர்கள் தெரிவு

(வண்ணார் பண்ணை)

தீவக கல்வி வலயப்பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி தெரிவுசெய்யப்பட்ட 139 பேரின் பெயர்ப் பட்டியல் தீவக வலயகல்வி அலுவலகத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இவர்களின் பெயர் விபரங்கள், பெற்ற புள்ளிகள், வலய மட்ட நிலை, மாவட்ட மட்ட நிலை, மற்றும் தெரிவுசெய்த பாடம் என்பனவும் வலய அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. (உ-109)

## 19 பேர் கைதாகி விடுதலை

[கொழும்பு]

கொழும்பு கொட்டாஞ்சேனை பகுதியில் மூன்று பெண்கள் உட்பட 19 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக கொட்டாஞ்சேனைப் பொலிஸார் அறிவித்துள்ளனர். [வ]

## தபால் மூல வாக்களிப்பு

(கொழும்பு)

ஆகஸ்ட் 21ம் திகதி இடம் பெறவுள்ள சர்வஜனவாக்கெடுப்பிற்கு தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை அனுப்பிவைப்பதற்கான இறுதிநாள் இம்மாதம் 17ம் திகதி என தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (வ)

## மாணவன் படுகாயம்

(வவுனியா)

இளமருதன்குளம் பகுதியில் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் பாடசாலை மாணவன் ஒருவன் படுகாயமடைந்துள்ளான்.

இளமருதன்குளம் நட்டாங்கண்டலைச் சேர்ந்த காராளசிங்கம்-விஜயகாந்தன் [வயது 14) என்ற மாணவன் பாடசாலை விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது தாக்குதலில் சிக்கிப் படுகாயமடைந்து தற்போது மல்லாவி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (ந-8)

## பால் மா பரிசோதனை

(கொழும்பு)

அதிகளவு கதிர்வீச்சு செலுத்தப்பட்ட பால்மாக்களை இலங்கையில் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

இந்தவகையில் அணுசக்தி அதிகாரசபையினால் பால்மாப் பரிசோதனை நாடுபூராகவும் இடம்பெற்றுவருகிறது.

இப்பரிசோதனையின் போது சர்வதேச அளவினை விட அதிகளவு அணுசக்தி செலுத்தப்பட்டிருக்கும் பால்மாக்களை இலங்கையில் தடை செய்ய அணுசக்தி அதிகாரசபை தீர்மானித்துள்ளது. [உ-7]

## கணனிப் பயிற்சி

(கல்வயல்)

கொட்டடி கிராம அபிவிருத்தி மன்றத்தால் அப்பகுதி இளைஞர் யுவதிகளுக்கு கணனிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

பயிற்சி பெறவிரும்பும் க. பொ. த. சாதாரண பரீட்சையில் சித்தியடைந்த ஆங்கில அறிவுடைய இளைஞர் யுவதிகள் இலக்கம் 1 சீனிவாசகம் வீதி, கொட்டடி யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு மேற்படி மன்றச்செயலாளர் அறிவித்துள்ளார். [உ-111]

## கட்டணத்தைச் செலுத்தத் தவறிய 8 ஆயிரத்து 300 பேரின் மின்விநியோகம்துண்டிப்பு விரைவில் அமுலாகும்

[புலோலி]

இலங்கை மின்சார சபை யாழ். மாவட்டத்தில் சுமார் 8 ஆயிரத்து 300 மின்பாவனையாளர்களின் மின்விநியோகத்தைத் துண்டிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அறிய முடிகிறது.

இந்த மின் பாவனையாளர்கள் தலா 2 ஆயிரம் ரூபாவுக்கு மேல் மின் கட்டணத்தை நிலுவையாக விட்டுள்ளனராம்.

மின் கட்டண நிலுவைகள் கூடிச் செல்வதால் இலங்கை மின்சார சபைக்குப் பெரும் பொருளாதாரப் பிரச்சினைகள் உருவாகி வருவதாகத் தெரிவித்த இலங்கை மின்சார சபை யாழ். உயர் அதிகாரியொருவர்,

மின்பாவனையாளர்களின் இவ்வாறான செயற்பாடுகளாலேயே மின்துண்டிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளார். (உ-52)

## யாழ். வைத்தியசாலையில் ஊழியர்களுக்கு தட்டுப்பாடு

### இணைய அறிக்கையில் தெரிவிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் மாவட்ட வைத்தியசாலைகளில் மருத்துவ, சுகாதார மற்றும் பொதுநிலை ஊழியர்களுக்கான தட்டுப்பாடு நீண்ட காலமாக இருந்து வருவதாக யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஆனி மாதநிலவர அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் 65 வைத்திய அதிகாரிகளுக்கும், 169 வ. பி. தர தாதிய உத்தியோகத்தர்களுக்கும், 252 பொது மருத்துவமாதுக்களுக்கும், 222 வைத்தியசாலை உதவியாளர்களுக்கும், 36 சுகாதார வேலையாட்களுக்கும், 23 காவலாளிகளுக்கும், 15 சாரதிகளுக்கும், 11 மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களுக்கும், 12 மருந்தாளர்களுக்கும் தட்டுப்பாடு நிலவிவருவதாகக் கூறப்பட்டுள்ளது.

இப்பதவிகளுக்கான வெற்றிடங்கள் நீண்ட காலமாகவே நிரப்பப்படாமல் இருந்து வருவதாகவும், இதன்காரணமாக யாழ். மாவட்டத்தில் மருத்துவ சுகாதார நிலைமை மேம்பாடடையவில்லையெனவும் இணையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-77)

## ரவூப் ஹக்கீமிற்கு அரசுடன் இணையுமாறு பலவழிகளாலும் அழுத்தம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் எந்தவித நிபந்தனையையும் முன்வைக்காது அரசுடன் இணைந்து அமைச்சர் பதவியை ஏற்று முஸ்லிம் சமூகத்துக்கு சேவை செய்ய முன்வர வேண்டுமென, பகிரங்க வேண்டுகோளை அமைச்சர் பௌசிவிடுத்துள்ளார்.

இதேவேளை, பலஸ்தீன தலைவர் ஜஸீர் அரபாத்தின் விசேட தூதராக பலஸ்தீன அதிகாரசபையின் சபாநாயகர் இலங்கைக்கு வருகை தந்து முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஹக்கீமை சந்தித்து பேச்சுக்களை நடத்தியுள்ளார். இதன் போது அவர் ஹக்கீம் அரசுடன் மீண்டும் இணைந்து கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்ததாக சொல்லப்படுகிறது.

இதேபோல முஸ்லிம் நாடுகளின் வேறு தூதர்களும் ஹக்கீம் அரசுடன்மீண்டும் இணைந்து முஸ்லிம் மக்களின் மேம்பாட்டுக்காக உழைக்க வேண்டும் எனவேண்டுகோள் விடுத்திருப்பதாக தெரிய வந்துளளது. (உ-8)

## கொப்புளிப்பான் பரவுகிறது

(செம்பியன்பற்று)

குடத்தனை, மணற்காடு பகுதிகளில் சின்னமுத்து, கொப்புளிப்பான் நோய்கள் வெகுவாகப் பரவி வருகின்றன.

தற்போது ஏற்பட்டுள்ள கடும் வரட்சியே இந்நோய்கள் பரவுவதற்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறன. (செ-42)

### ஜெனரல் முஷாரப் - பிரதமர் வாஜ்பாய்

# வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த

# பேச்சு ஆக்ராவில் நேற்று ஆரம்பம்

### 4 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில்

(ஆக்ரா)

உலகத்தவர் பலராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுவார்த்தை நேற்றுக் காலை 11.30 மணியளவில் இந்தியாவின் ஆக்ராவில் ஆரம்பமாகியது.

பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப், இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் ஆகியோர் பலத்த பாதுகாப்புடன் பேச்சுவார்த்தை மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

காஷ்மீர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒருபோதும் சாத்தியமகாது என வற்புறுத்திய ஜெனரல் முஷாரப் அமைதி வழியே நிரந்தரமான தீர்வுக்கு வழி வகுக்கும் என்பதையும் ஒப்புக்கொண்டார்.

இரு நாடுகளிற்கும் இடையே இருக்கும் இடைவெளியை குறைப்பதே தமது பயணத்தின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு முன்னதாக இந்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் ஆகியோர் ஜெனரல் முஷாரப்பை தனித்தனியே சந்தித்து பேச்சு நடத்தினர்.

தலைமறைவுக் குழுபல் தலைவர் தவுத இப்ராஹீமை இந்தியாவிற்கு திருப்பி அனுப்பும்படி இந்திய மத்திய உள்துறை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

குற்றம் இழைத்தவர்கள் தப்பி ஓட அனுமதிக்கப்படக் கூடாது என்றும் மத்திய அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

கடந்தகாலச் சம்பவங்களை மறந்து சில துணிச்சலான முன்முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஜெனரல் முஷாரப் தெரிவித்தார்.

எதிர்க் கட்சித் தலைவர் திருமதி சோனியா காந்தி, டாக்டர் மன்மோகன்சிங், நட்வார்சிங் ஆகியோரும் ஜெனரல் முஷாரப்பை சந்தித்து உரையாடினர்.

பேச்சுவார்த்தையின் முடிவில் பாகிஸ்தானுக்கு நல்லெண்ண விஜயம் மேற்கொள்ளுமாறு இந்திய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய்க்கு பாகிஸ்தான் அதிபர் அழைப்பு விடக்கூடும் என்றும் அரசியல் அவதானிகள் பலரும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில், இப்பேச்சுவார்த்தையின் எந்த ஒரு சாதக நிலையையும் தான் ஆதரிக்கப் போவதாக ரஷ்யா தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்பேச்சுவார்த்தை இடம்பெற்ற நவீன வசதிகள் பொருத்தப்பட்ட உல்லாச விடுதியைச் சுற்றி நாலாயிரம் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். (க)

## உலக தரிசனம்

### 150 பேர் பலி

(காட்மண்டு)

நேபாளத்தில் நூற்றுஐம்பது மாவோ கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

எழுபது காவல்துறையினரை மாவோ கிளர்ச்சியாளர்கள் நிராயுதபாணிகளாக்கி மறைத்து வைத்திருப்பதை அடுத்து, மூன்று நாட்களாகப் படையினருக்கும் மாவோ கிளர்ச்சியாளர்களுக்குமிடையில் நடைபெற்றுவரும் உக்கிரமோதலில் கிளர்ச்சியாளர்களில் மேற்படி தொகையினர் படையினரால் கொல்லப்பட்டனர் என்று அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

நேபாளத்தில் மாவோ கிளர்ச்சியாளர்களும் படையினரும் மோதலில் ஈடுபடுவது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (க-து)

## வட கொரிய கப்பல் கடலில் மூழ்கியது

(ரோக்கியோ)

ஜப்பான் கடல் பகுதியில் வட கொரியச் சரக்குக் கப்பல் 17 பேருடன் மூழ்கியுள்ளது.

ஜப்பானிய வாயுக் கப்பலுடன் மேற்படி வட கொரியக் கப்பல் மோதியதாலேயே இக்கப்பல் மூழ்கியுள்ளது.

இச்சம்பவத்தில் ஜப்பானியர் ஒருவரைக் காணவில்லையென ஜப்பான் அறிவித்துள்ளது. ஜப்பான் வாயுக் கப்பலிலிருந்து வாயு கசியவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## பிரதம மந்திரியிடமிருந்து அழைப்பு வந்தவுடன் தே.ஜ.கூ.யில் இணைவேன்

### டாக்டர் ராமதாஸ் தெரிவிப்பு

(சென்னை)

பிரதம மந்திரி வாஜ்பாயிடமிருந்து அழைப்பு வந்ததும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் சேர்வது பற்றித் தான் முடிவெடுப்பதாக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் கூறியிருக்கிறார்.

திண்டிவனம் அருகே நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர் மத்தியில் அவர் தெரிவிக்கையில்;

பாட்டாளி மக்கள் கட்சிப் பொதுக்குழு தமக்கு வாஜ்பாய் அரசுடன் இணைவதற்கு அதிகாரம் அளித்ததுடன் வரும் உள்ளூர் ஆட்சித் தேர்தல்களில் கூட்டணியுடன் இணைந்து செயற்படவும் அதிகாரம் அளித்துள்ளது என்றும் தெரிவித்தார். (து)

பிரேஸிலில்

## இயல்பு பணிகள் ஸ்தம்பிதம்

(பிரேஸிலியா)

பிரேஸில் பொலிஸாரின் சம்பள உயர்வு கோரும் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த உண்ணாவிரதத்தினால் பொலிஸாரின் கடமைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதால் இராணுவத்தினரே அவர்களின் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிரேஸிலின் ஜனாதிபதியின் உத்தரவு வரும்வரையில் தமது உண்ணாவிரதப் போராட்டம் தொடரும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பிரேஸிலின் வங்கிகள், பாடசாலைகள் மற்றும் அரச திணைக்களங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. (உ-7)

## தாம் வளர்ந்த இல்லத்தை பார்வையிட்ட பாக்.அதிபர்

(புதுடில்லி)

பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் பர்வேஸ் முஷாரப இந்தியாவில் தான் நான்கு வயது வரை வளர்ந்த இல்லத்தைப் பார்வையிட்டார்.

இல்லத்திற்குச் சென்றபொழுது அங்கு வாழும் தம் உறவினர்களுடன் உரையாடினார் அவர்கள் நினைவுப் பொருட்களை அவருக்குச் கொடுத்தார்கள். முஷாரப்பும் அன்பளிப்புகளை அவர்களுக்கு வழங்கினார். (து)

## மகாத்மா சமாதிக்கு முஷாரப் மலரஞ்சலி

(புதுடில்லி)

அகிம்சை, அமைதி என்ற கொள்கைகள் முன்பு எப்போதையும்விட இப்பொழுது மேலோங்கிநிற்கிறது என்று மகாத்மாகாந்தியின் நினைவேட்டுப்புத்தகத்தில் ஜெனரல் முஷாரப் எழுதிக் கையெழுத்திட்டார்.

இந்தியாவிற்கு வருகை தந்திருக்கும் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் பெர்வேஸ்முஷாரப் மகாத்மாகாந்தியின் சமாதிக்கு மலர் அஞ்சலி செய்த பின்பே மேற்கண்டவாறு எழுதினார்.

மகாத்மாகாந்தி அந்தக் கொள்கைக்காக வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து வந்தார் என்று மேலும் அப்புத்தகத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காந்தியின் சமாதிக்கான மலர் அஞ்சலியில் ஜெனரல் முஷாரப்பின் மனைவியும் கலந்து கொண்டார். (து)

## வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

### ★ சூரியன் பற்றி சுவையான தகவல்கள்

உலகினது சக்தி முதலாய் உள்ள சூரியனை அன்றாடம் நாம் காண்கின்றோம். ஆனால் சூரியனைப் பற்றி எந்தளவிற்குத் தெரிந்து வைத்துள்ளோம்?

பூமியில் இருந்து 2 1/2 கோடி கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் சூரியனின் பருமனைப் பற்றிச் சொல்வதாயின் இப் பூமியைப் போல 10 இலட்சம் பூமியை ஒன்றாகத்திரட்டி ஒரு பந்து செய்தாலும் அது சூரியனை விட சிறிதாகவே இருக்கும். என்பதனூடு விளங்கிக் கொள்ள முடிகிறதல்லவா?

இச் சூரியனை தூரதிருஷ்டி கண்ணாடி (Telescope) கொண்டு ஆராய்ந்தால் அதில் மனித உடலில் உள்ள மச்சங்களை போல சிறு சிறு களங்கங்கள் காணப்படுவதை அவதானிக்கலாம். சூரியனும் பூமியைப் போல் தன்னைத் தான் சுற்றிய வண்ணம் உள்ளது. இது தன்னை ஒரு முறை சுற்ற சுமார் 26 தினங்கள் எடுக்கின்றது

இந்தச் சூரியனுக்கும் பூமிக்கும் ஒரு நேரான இரும்புப் பாதை போட்டு அதில் மணிக்கு 30 கிலோ மீட்டர் வேகத்தில் புகை வண்டி ஒன்றைச் செலுத்தினால் அது அங்கு போய்ச்சேர சுமார் 260 வருடம் எடுக்கும். ஆனால் அது சூரியனை அண்மிக்க முன்னரே புகையாகிப் போய் விடும் என்பது வேறு விடயம்;

### ★ எலியுடன் வந்தால் எளிதாக திருமணம்

அந்தக் காலங்களில் காளையை அடக்கி கன்னியை மணம் முடிக்கும் சம்பவங்கள் நிறையவே கேள்விப்பட்டிருக்கின்றோம். பழைய இலக்கியங்களே இதற்குச் சான்று. ஆனால் எலி பிடித்தால்த் தான் கல்யாணம் என்ற கட்டுப்பாடு பற்றி கேள்விப்பட்டுள்ளீர்களா?

விடயம் இது தான் மேற்கு ஜாவாவில் உள்ள வானசாரி ஜில்லாப் பகுதியில் இளைஞர்கள் திருமணம் புரிய வேண்டுமாயின் அவர்களுக்கு ஒரு போட்டி உள்ளது. பொறி எதுவும் வைக்காமல் குறைந்தது 50 எலிகளைப் பிடித்து தன் திறமையை நிரூபித்தால் தான் மணப் பெண் கழுத்தை நீட்டுவாளாம். என்ன நீங்களும் எலி பிடிக்க ரெடியா?

-அவதானி-

## செய்திப்பரல்

★ குண்டு அச்சுறுத்தல் காரணமாக மூடப்பட்டிருந்த லண்டன இங்ஸ் குரேஸ் ரயில் நிலையம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

★ வட வெனிசுலாவில் ஏற்பட்ட விமான விபத்து ஒன்றில் 8 போலந்து காரர்களும், 5 வெனிசுலா ஊழியர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

★ உலகில் தற்போது 55 கோடி சிறியரக ஆயுதங்கள் பாவனையில் இருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்குள்ளன.

★ இத்தாலி நாட்டினுள் 300சட்ட விரோதக்குடியேற்ற வாசிகள் அண்மையில் நுழைந்துள்ளனர்.

★ பிரெஞ்சு கயனாவிலிருந்து இரு விண்கலங்களுடன் அனுப்பப்பட்ட ஏரியர்-5 ரொக்கெட் இயந்திரக் கோளாறு காரணமாக விண்கலங்களை குறித்த இலக்கிற்கு கீழே விட்டுள்ளது. (க-3)

## பிரதமர் வாஜ்பாய் விரைவில் பாக்.பயணம்?

(புதுடில்லி)

விரைவில் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் பாகிஸ்தான் செல்வார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இரு நாட்களாக இந்தியாவில் தங்கி முக்கிய தலைவர்களுடன் இரு நாடுகளுக்கிடையேயான முக்கிய பிரச்சினைகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்திய பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் முஷாரப் வாஜ்பாய்க்கு பாகிஸ்தானுக்கு வரும்படி அழைப்பு விடுவாரென்று நம்பகரமாகத் தெரியவருகிறது.

சில எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் இரு தலைவர்களும் மனம் விட்டு இரு நாட்டுப் பிரச்சினைகளையும் பேசியிருக்கிறார்களென்றும் இருவரும் மன நிறைவில் இருப்பதால் முஷாரப் வாஜ்பாய்க்கு அழைப்பு விடும் சந்தர்ப்பம் அதிகமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## அடுத்த ஒலிம்பிக் சீனாவில் ஏகமனதாக முடிவு

[பீக்கிங்]

அடுத்த ஒலிம்பிக் போட்டி சீனாவில் நடத்தப்படுவது நிச்சயமாகி விட்டது.

கடந்த வெள்ளி நடந்த ஒலிம்பிக் கூட்ட வாக்கெடுப்பில்சீன நகரொன்றில்மேற்படி போட்டியைத் நடத்துவதற்கு ஏகமனதாகமுடிவுசெய்யப்பட்டுள்ளது.

சீனாவில் 2008 ஆம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டி நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளமையானது உலகில் முதிர்ச்சியடைந்தஒருநாடாக சீனா உருவாகி விட்டதையே கோடிட்டுக் காட்டுவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஒலிம்பிக் போட்டி முதன் முதல் இடம் பெற்ற தென்னாசிய நாடு கொரியா என்பதும் குறிப்பிடத்தக்கது; [து]

மனத்தானாம் மாந்தர்க்(கு) உணர்ச்சி:இனத்தானாம் இன்னான் எனப்படும் சொல்.

குறள்

# வலம்புரி

## உண்மைகள் துலங்கட்டும்

யாழ் பல்கலைக் கழக மாணவன் திவ்வியனின் கைதினால் எழுந்துள்ள இக்கட்டான சூழ்நிலையில், ஒரு திடமான தீர்க்கமான முடிவுக்கு சகல தரப்பினரும் முன்வருவது காலத்தின் கட்டாய தேவையாகும். காங்கேசன் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவன் திவ்வியனை யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் மாணவர் ஒன்றியத்தலைவர் ஆகியோர் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இந்நிலையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்விடுத்தஅறிக்கையொன்றில் திவ்வியன் கடுமையாகத் தாக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே வேளை பலாலி படைத்தலைமையகம் விடுத்த அறிக்கையில் மாணவன் திவ்வியன் தாக்கப்படவுமில்லை சித்திரவதைக்குட்படுத்தப்படவுமில்லை, எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருநபர் குறித்து இருதரப்பாரும் விடுத்துள்ள நேர்மாறான அறிக்கையில் உண்மைநிலையை அறிவதில பொதுமக்களும் மாணவர்களும் மிகவும் ஆவலுடன் உள்ளனர்.

இச்சந்தர்ப்பத்தில், மாணவர் ஒன்றியம், படைத்தரப்பு என்பவற்றுக்கு மேலாக மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரி மாணவன் திவ்வியனை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

எனவேஇருதரப்பாலும் விடுக்கப்பட்டுள்ள அறிக்கைகளில் எது உண்மையானதென்பதை யாழ் மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரி வெளிப்படையாகத் தெரியப்படுத்த வேண்டும் அதன் மூலமே உண்மைநிலை வெளிவர முடியும்.

அத்துடன் மாணவன் திவ்வியன் தனது கைது பற்றியும், கைது செய்யப்பட்டதன் பின்னர் படையினரால் தான் நடத்தப்பட்ட முறைகள் பற்றியும் எடுத்துக்கூறியிருப்பின் அதனையும அறிக்கையாக வெளியிடுவது உண்மை நிலையை அறிவதற்கு உதவியாக இருக்கும்.

அதேவேளை கைதிகளைப் பார்வையிட்ட பின்னர் மனித உரிமை ஆணைக்குழு பகிரங்கமாக உண்மைநிலையை வெளிப்படுத்துவதன் மூலம் கைதுகளின் போது ஏற்படும் சித்திரவதைகளும், தாக்குதலும் ஓரளவுகளேனும் குறைவதற்கும் குறைப்பதற்கும்ஏதுவாக அமையும் என நம்பலாம்.

---

# சைவ சமயத்திற்கு மீண்டுமோர் பேராபத்து

# இன யுத்தத்தைப் பயன்படுத்தி மதம் மாற்றுவதில்

# சில கிறிஸ்தவ அமைப்புகள் களத்தில் குதிப்பு

## ஆங்கிலேயர் தந்த வேதனையில் மீண்டும் சைவ மக்கள்

(3)

(9. 7.2001இன்தொடர்ச்சி)

### சைவத்தின் அழிவுக்கு அந்தணர்களேகாரணம்

சைவசமயத்தின் பெருமைகளையும், அதன் அற்புதமான கருத்துக்களையும் காப்பாற்றி மதம் மாறுவதைத் தடுக்க வேண்டியவர்கள் சைவ மதகுருமார்களான அந்தணச்சிவாச்சாரியர்களே ஆனால் அவர்களுக்கு சமயத்தின் பால் எந்த அக்கறையும்

## குருஷேத்திரம்

இல்லை. சைவம எக்கேடு கெட்டாலும், அதைப்பற்றி அவர்கள் கவலைப்படப் போவதுமில்லை. ஏனெனில் அவர்களுக்கு சைவாலயங்கள் தொழில நிலையங்கள் ஆண்டவன் வியாபாரப் பொருள்—அர்ச்சனைவியாபாரத்துக்கான பற்றுச்சீட்டு. எங்கெங்கு இலாபம் கிடைக்கிறதோ அங்கெல்லாம் ஓடி ஓடி தமக்கு வருமானத்தைதேடிக் கொள்கிறனர்.

இந்த அநியாயம் உலகத்திலுள்ள எந்தச்சமயத்திலும் கிடையாது கடவுளைச் சாட்டி ஒருவன் பணம் உழைக்க முனைந்து விட்டால் பின்பு தெய்வீக மென்பது எப்படி ஏற்படும்

பிற மதங்களின் மதகுருமார் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகிறார்கள் ஏழைப்பிள்ளைகளைப் பராமரிக்கின்றனர். பாதிப்படைந்தோர்களை ஆற்றுப்படுத்துகின்றனர். பிறரின் இன்பதுன்பங்களில் பங்குபற்றுகின்றனர். ஏழைகள், இயலாதவர்களுக்கு உதவுகின்றனர். ஆனால் நம் சைவ மதகுருமார் எங்காவது பருந்துக்கேனும் ஓர் அநாதை இல்லம் நடத்துகிறார்களா, அல்லது

ஏழை மக்களுக்கு ஏதாவது நிவாரணப்பணிகளை வழங்க முன் வருகிறார்களாக, இல்லவே இல்லை. அப்படியானால் அந்தணச் 'சிவாச்' சாரியர்களை சமூகம் எங்கனம் மதிக்கும்.

சமூகத்திற்கு மதகுருவாலும், மதகுருவுக்கு சமூகத்தாலும் ஏதோ ஒரு உதவி-ஒத்தாசை- வழிகாட்டல் இருக்க வேண்டும்.

வெறுமனே மணியடித்து கற்பூரம் காட்டுவதுடன் மதகுருவின பணிமுடிவடைவதாயின் அதனைச் செய்வதற்கு அந்தணர்கள்தேவையில்லை. வீதியால் செல்லும் ஆண்டி ஒருவனே போதும். ஏனெனில் நித்திய பூசை செய்த சிவகோ

# சைவ சமயத்தின் அழிவிற்கு

# அந்தணர்களே காரணமாவர்

ச்சாரியாருக்கு கொடுக்காத காட்சியை, வேட்டுவக் கண்ணப்பனுக்கு அந்தக் காளத்திப் பெருமான் காட்டினானல்லவா இதனை அந்தணச் சிவாச்சாரியார்கள் ஒரு கணம் சிந்தையிருத்த வேண்டும. நிந்தைப்படுத்துவதற்காக இதைக் கூறவில்லை. ஆனால்சிவ பூமியில் எக்காலத்திலும ஒலிக்காதவை ஒலிக்கின்றனவே அதனால் மனம் வெந்து கூறுகின்றேன்.

### அந்தணர்களின் கடமை எது?

வெறுமனே பூசை வழிபாடுகளுடன் நின்று விடுவதால் அந்தணர்களின் கடமை முடிந்துவிடுவதாகப் பொருள்படாது. பிற சமயம் சார்ந்த மதகுருமார் எப்படித் தங்களது மதங்களைக் கட்டிக் காப்பாற்றப் பாடுபடுகிறார்களோ, அதேபோன்று சைவ சமயத்தையும் கட்டிக்காக்க வேண்டியது அந்தணர்களின் தலையாய கடமையாகும்.

இன யுத்தம் தொடங்கிய காலத்திலிருந்து இன்று வரை நம் சைவசமயத்திலிருந்த எத்தனையோ ஆயிரம் பேர் மதம் மறிவிட்டனர். மாற்றப்பட்டு விட்டனர். ஆனால் இது குறித்து அந்தணர்கள் கவலை கொண்டதாக, அல்லது அதற்கெதிராக நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. ஏனெனில், கிரியைகளைச் செய்யும் அந்தணர்கள் தம்மை ''பிராமணர் குலம்'' என்ற நிலையிலும், வழிபாட்டுக்காக வருபவர்களை சூத்திரர்களென்ற நிலையிலுமே பார்க்கின்றனர்.

இதனால் அங்கு ஓர் ஏற்றத்தாழ்வு ஏற்படுகிறது மதகுருவுக்கும், அதே மதம் சார்ந்தவனுக்குமிடையே நான் உயர்ந்தவன், நீ தாழ்ந்தவன் என்ற உறவு நிலை இருக்குமாயின், சமயம் எப்படி முன்னேற முடியும்.

மாறாக காலக் கிரமத்தில் சிவாலயங்களுக்கு முன்னால் ஆண்டவன் அந்தா வருகிறார் இந்தா வருகிறார் என்ற அவலக்குரல்களே கேட்கும் இப்போதும் சில சில சிவாலயங்களுக்கு முன்னால் கூக்குரல்கள் கேட்கிறதல்லவா? அது சரி அந்தணர்களுக்கு எங்கே விளங்கப் போகிறது. இந்த ஆலயத்தில் வியாபாரம் முடிந்து கடைக் கதவு பூட்டினால் அந்த ஆலயக் கதவு திறந்து வியாபாரம்நடக்கும்.

**விதுரன்**

தோஷம் நீக்க தூபம் பாவம் நீக்க தீபம் மோட்சம் போக்க தானம் என்ற வியாபாரப்பட்டியல், நுகர்வோர் (சைவ சமயத்தவர்கள் மட்டும்) பாதுகாப்புச் சட்டத்தின்பிரகாரம் ஆலயங்களில் தொங்க விடப்பட்டு கட்டண விபரமும்காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். இலங்கையில்நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்படி விலைப்பட்டிய தொங்க விடப்படும். ஒரேயொரு இடம் சைவாலயங்கள்மட்டுமே.

**மேலும்**இறை பணியுடன் அற்புதப்பணியாற்றும் அந்தணச் சிவாச்சாரியார்கள் இக்கட்டுரைக்குள் அடங்க மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் எம் இதயங்களில் பூசிக்கப்படும் தெய்வங்கள் கடிதெனில் மன்னிப்பார்களாக.

(அடுத்த திங்கள் தொடரும்.)

---

# 'விதுரனின்' கட்டுரை உண்மைக்கு புறம்பானது

# அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் கண்டனம்

கடந்த 09. 07. 2001 அன்று குருஷேத்திரத்தில் விதுரன் எழுதிய சைவசமயத்திற்குமீண்டுமோர் பேராபத்து--- என்றகட்டுரையில் வெளியான கருத்துக்களைக் கண்டித்து யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் ந. சந்தையா கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் அக்கடிதம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

(ஆ-ர்)

ஆசிரியர்,
வலம்புரி,
யாழ்ப்பாணம்.

அன்புடையீர்,

தங்கள் 09 07 2001 வலம்புரி பத்திரிகையில் விதுரன் எழுதியுள்ள 'சைவ சமயத்திற்கு மீண்டும் ஓர் பேராபத்து' என்ற தலைப்பிலான கட்டுரையில் யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தையும் தொடர்புபடுத்திஉண்மைக்கு புறம்பான தகவல்களை வெளியிட்டிருப்பது எமக்கு பெரிதும்மனக்கவலையையும், அதிர்ச்சியையும் கொடுத்துள்ளது.

எமது இணையம் ஆரம்பிக்கப்பட்டபொழுது இன,மத பேதமற்ற நிலையில மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும என்ற நோக்குடன் 'ஒன்றுபடுவோம சேவை செய்வோம்' என்ற தாரக மந்திரத்தை சிரமேற்கொண்டு எமது பணிகளை முன்னெடுத்தோம. கடந்த பதினாறு வருடகால இணைய செயற்பாட்டில் எந்தவொரு அரச சார்பற்ற நிறுவனமும இணையத்தை தனது கைப்பொம்மையாகப்பாவித்துதனது அதிகாரத்தை திணித்தது கிடையாது.

இணைய யாப்பின் பிரகாரம யாழ். மாவட்டத்தில் நிவாரண—புனர்வாழ்வுப்பணிகளில ஈடுபடுகின்ற அமைப்புகளே இணையத்தில் அங்கத்துவம வகிக்க முடியும். இதன் அடிப்படையிலேயாழ். மாவட்டத்தில் பணிபுரிகின்ற பல நிறுவனங்கள இணையத்தில் இணைந்து கொண்டன. இப்படி இணைந்து கொண்டநிறுவனங்களில் சிலவற்றிற்கு கிறிஸ்தவ குருமார் நிர்வாக இயக்குநர்களாக இருப்பதனால் இணையச் செயற்பாடுகளில் கலந்து கொள்கின்றார்கள். அதே போன்று எமது இணையத்தில் இணைந்து கொண்ட ஏனைய நிறுவனங்களில் இந்துக்குருமார் தலைமைப்பொறுப்பிலோ, நிர்வாக பொறுப்பிலோ இல்லாத காரணத்தினால அவர்கள் எமது இணையச் செயற்பாடுகளில் கலந்து கொள்வதில்லை.

இந்த நிலையில் இணையத்தை கிறிஸ்தவ மத குருமார் ஆக்கிரமித்திருப்பதாகவும, இந்து மத குருமாரை புறம தள்ளியிருப்பதாகவும் கட்டுரையில் தெரிவித்திருப்பது உண்மைக்கு புறம்பான திரிபுபடுத்தப்பட்ட ஒரு கட்டுக்கதையே. அதேவேளை இணையத்தில் மதகுருமார் என்ற ரீதியில் அங்கத்துவம் இல்லை அரச சார்பற்ற நிறுவனம் என்ற ரீதியிலேதான் அங்கத்துவம் பெறமுடியும்.

மேலும் கட்டுரையாளர் இன்னொரு விடயத்தையும் திரிபுபடுத்தியிருந்தார். அதாவது, பத்திரிகையாளர் திருச்செல்வம கைது பற்றி குறிப்பிட்டு இவரது விடுதலை தொடர்பாக குரல் கொடுக்குமாறு யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும், ஆனால் அதனை நிராகரித்தவர் மதகுரு ஒருவரே எனவும், காரணம திருச்செல்வம் சைவ சமயத்தவர் என்பதால் எனவும் குறிப்பிட்டிருந்தார். ஆனால் இணையத்திடம் இப்படியான கோரிக்கையை எவரும விடவில்லை, இவ்விடயம் பற்றி இணையத்தில் நாம் பரிசீலிக்கவும் இல்லை, மதகுரு ஒருவர் இதனை நிராகரிக்கவும இல்லை. இணைய செயற்பாட்டிற்கு தலைமை தாங்கி அதன் நிர்வாகத்தை கண்காணித்துவருபவன் என்ற ரீதியில் கட்டுரையாளரின் இக்குற்றச்சாட்டை முழுமையாக மறுக்கின்றேன்.

(ந)

# மருத்துவ சங்கத்தின் அறிக்கைக்கு யாழ். பாதுகாப்புத் தளபதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகமாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் படையினரால் சித்திரவதைக்கு உள்ளாகியிருப்பதாக அரசமருத்துவ அதிகாரிகள் சங்கம் வெளியிட்ட அறிக்கை தவறானது.

இவ்வாறு யாழ் பாதுகாப்பு தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால அறிவித்துள்ளார்.

இது சம்மந்தமாக யாழ் பாதுகாப்பு தலையகம்நேற்று செய்திக் குறிப்பொன்றை அனுப்பியது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடந்த 12ந்திகதி வெளியிட்ட அறிக்கையில் மாணவன் திவ்வியன் படையினரால் சித்திரவதைக்கு உள்ளாக்கப் பட்டதாக தெரிவித்திருப்பதில் எவ்வித உண்மையும் இல்லை.

பொலிஸாரின் பாதுகாப்பில் இருக்கும் மேற்படிமாணவனை யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர், பீடாதிபதிகள், மாணவ ஒன்றியப்பிரதிநிதிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்குழு, மற்றும் மாணவனின் தாயார் சகோதரர் ஆகியோர் பார்வையிட்டு சுகநலம் விசாரித்தனர் எனவே அவர்கள் மூலமே பிரஸ்தாப மாணவன் சித்திரவதைக்கு உள்ளாக்கவில்லையென்பதைதெரிந்து கொள்ள முடியும்.

அத்துடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவினர், மாணவன் சித்திரவதைக்கு உள்ளாகியிருந்தால் சர்வதேச மனித உரிமை மீறலுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருப்பார்கள். இந்நிலையில் மாணவன் சித்திரவதைக்கு உட்படவில்லையென்பதே உண்மை விரைவில் மாணவனை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி அதன் அறிக்கையை பத்திரிகைகளில் வெளியிடுவோமென்று சுசில் சந்திரபால உறுதியளித்துள்ளார். (இ)

---

### எதிர்க்கட்சி

பாராளுமன்றக் கட்டிடத்திற்கு முன்பாக ஒன்று கூடுமாறு பணித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

இதேவேளை எதிர்க்கட்சி எம்பிக்கள் பாராளுமன்றத்திற்குள் அத்துமீறி நுழைவதை தடுப்பதற்கென இரவோடு இரவாக விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், எந்நேரமும் தென்னிலங்கையில் கலகம் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ

### திவ்வியனை

விவகாரம் தொடர்பாக 51வது படையணியின் கட்டளை அதிகாரி மேஜர்ஜெனரல் காமினி ஜெயசுந்தர தலைமையில நேற்று ஞானம் ஹோட்டலில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை வடமாகாண அதிபர்கள் சங்கத்தலைவர் க. இராஜதுரை, மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம்பிள்ளை, சட்டத்தரணி க கேசவன், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் ஜெனதிரன் உட்பட ஆறு மாணவர் பிரதிநிதிகள் மற்றும யாழ் மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி, யாழ். பொலிஸ் அத்தியட்சகர் என். குணதிலக ஆகியோர் கலந்து கொண்டனர். (ம

### வீரமக்கள்

தினவாக, யாழ் முற்றவெளியில் நினைவுத்தூபியின் பெயர் முகப்பு வளைவு திறந்துவைக்கப்படும்.

இதேவேளைபோரில் உயிர் நீத்த தலைவர்கள், தளபதிகள், அனைத்து இயக்கப் போராளிகள் ஆகியோரை நினைவுகூர்ந்து அஞ்சலி உரைகளும் இடம்பெறும், இதில் பொதுமக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு புளொட் அமைப்பு கேட்டுள்ளது. (ந-8)

### அரசில்

கப்பட்டுவருகிறது; எனினும் தான் ஒருபோதும் அரசில் இணையப் போவதில்லை. இதுவிடயமாக பலஸ்தீன சமாதானநாயகருக்கும் தான் அறிவித்துவிட்டதாக ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் எமது பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை பறிக்கப் போவதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி.எம் ஜயரத்தினா கடிதமூலம் அடிக்கடி மிரட்டி வருகிறார். முடியுமானால் அவர் எமது எம்.பி பதவியை பறிக்கட்டுமென்றும் ஹக்கீம் சவால் விடுத்துள்ளார்.

இதேவேளை பாலஸ்தீன தலைவர் யசீர் அரபாத் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில ரவூப் ஹக்கீமை இணைக்க பாடுபட்டவரென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### கல்முனை

டங்களைக கட்டுப்படுத்த படையினர் ஆங்காங்கே வானை நோக்கி வேட்டுக்களைதீர்த்ததாகவும், பொதுமகன் ஒருவரின் மோட்டார் சைக்கிள மற்றும் துவிச்சக்கர வண்டிகள் தீயிட்டு கொழுத்தப்பட்டதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள தெரிவிக்கின்றன. (இ)

### பாராளுமன்ற

விக்கிரமசிங்கவிற்கு நேற்று அனுப்பிவைத்துள்ள கடிதம ஒன்றில் தெரிவித்துள்ளார்

அக்கடிதத்தில சபாநாயகர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

பாராளுமன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஜனாதிபதியே பொறுப்பானவர், ஜனாதிபதியின் பிரகடனத்துக்கு எதிர்ப்பும கண்டனமும தெரிவித்திருந்த ஜனாதிபதியின் பிரகடனத்துக்குப்பின பாராளுமன்றத்தை கூட்டமுடியாது.

நாட்டின் தறபோதைய அரசியல யாப்பின்பிரகாரமே நான்நடந்து கொள்ளமுடியும் இதனால் எனது அதிகாரங்களின் எல்லைகளை நான் மீறமுடியாதுள்ளது என்றும் சபாநாயகர் தெரிவித்துள்ளார் (6)

---

## சுட்டுக் கொலை

(திருகோணமலை)

திருகோணமலை ஆலங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அமீர்கான் லியாசர் தலீல் நேற்று காலை கிண்ணியா இடிமண் பகுதியில் வைத்து இனந் தெரியா தோரால் சுடடுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவரது கொலையை கண்டித்து நேற்று கிண்ணியா பகுதி எங்கும் கடைகள் பூட்டப்பட்டு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது (வ-பி)

## ஜனாதிபதிக்கு மகஜர்

(கொழும்பு)

யாழ் பல்கலைகழக மாணவன் திவ்வியன் உடன்விடுதலை செய்யப்பட வேண்டும் பல்கலைகழகம் உடனடியாக திறக்கப்படவேண்டும் என்று கோரும் மகஜர் ஒன்றை கிளிநொச்சியைவட்ட பல்கலைக்கழக மாணவர்களின் பெற்றோர்சங்கம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பிவைத்துள்ளது. (ந-8)

---


**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
சரத்குமார், மீனா, வடிவேல் நடித்த
**மாயி**
(இனிய பாடல்கள் நிறைந்த படம்)
(காட்சிகள்)
தினசரி 11-00, 2-30
(4326

**ராஜா**
**யாழ்ப்பாணம்**
கடைசி வாரம்
லக்கிஸ்டார் அஜித்
(9 வேடங்களில)
வசுந்தராதாஸ், மீனா, நக்மா மற்றும் பலர் நடித்த
STR பிலிம்ஸ்
**சிட்டிசன்**
தினசரி: 10-30, 2 30 [பு நே]
சனி ஞாயிறு 10-30, 2-00, 5 00 [பு பே]
(கி-2125)


---

## திவ்வியனின் விடுதலை தமிழர் ஆசிரியர் சங்கம் பூரண ஆதரவு வழங்கும்

(யாழ்ப்பாணம)

யாழ் பல்கலைக்கழக மாணவன் திவ்வியனின் முழுமையான விடுதலை அல்லது அவரைநீதிமன்றத்தில் ஆஜர் செய்வது தொடர்பாக யாழ் பல்கலைக்கழக சமூகமும் மாணவர் ஒன்றியமும எடுக்கும் சகலநடவடிக்கைக்கும் இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம்தனது பூரண ஆதரவை வழங்கும்

இவ்வாறு நேற்றையதினம் யாழ்இந்துமகளிர் கல்லூரியில் நடைபெற்ற சங்கத்தின் யாழ்மாவட்டக் கூட்டத்தில் முடிவுஎடுக்கப்பட்டதாக சங்கத்தின் சிரேஷ்டதுணைப் பொதுச்செயலாளர் த பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் எதிர்வரும்19ம்திகதிக்கு முன்இவ் விடயம் தொடர்பாக அரசும் இராணுவத்தரப்பும் சுமூகமான முடிவு எடுக்கவேண்டும் அவ்விதம் அவர்கள் செய்யாவிட்டால் எதிர்வரும் 20ம் திகதி வடகிழக்கு பகுதியில் எட்டு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து சங்கத்தினால் மேற்கொள்ளவிருக்கும் ஒருநாள் சுகயீன லீவுப்போராட்டத்திற்கு திவ்வியனின் விடுதலை விடயமும் ஒரு கோரிக்கையாக முன்வைக்கப்படும்.

பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்பட்டு வழமையான செயற்பாடுகளை மேற்கொள்ளவும் பாடசாலைகள் வழமைபோல் நடைபெறவும் சங்கம் தனது முயற்சியைத் தொடரும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## அமைச்சர் டக்ளஸ் தலைமையில் கல்வி அபிவிருத்தி கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் குறைபாடுகளை இனம்காணும் கல்வி அபிவிருத்தி திட்ட முன்னோடிக் கருத்தரங்கொன்று, நாளை காலை 10 மணிக்கு வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் அமைச்சின் யாழ் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் யாழ், குடாநாட்டு வலயக்கல்விப் பணிப்பாளர்கள், மேலதிக கல்விப்பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், பல்கலைக்கழக துணைவேந்தர், அரசாங்க அதிபர், தொழில் நுட்பக் கல்லூரி அதிபர்கள், யாழ் தேசியகல்வியற்கல்லூரி பீடாதிபதி, மற்றும் கோப்பாய், பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர்கள், ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## நெல்லியடி - மண்டான் பகுதிகள் சுற்றி வளைப்பு

(யாழ்ப்பாணம்)

நெல்லியடிப்பகுதியில் கொடிகாமம்வீதி யாழ்-பருத்தித்துறைவீதி மண்டான் பகுதி ஆகியன நேற்று அதிகாலை இராணுவததினரால் சுற்றிவளைக்கப்பட்டு பாரிய தேடுதல் நடத்தப்பட்டது.

இத் தேடுதலுக்கு பெரும் தொகையான படையினர் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர்.

தேடுதல்வேட்டையில் ஈடுபட்டிருந்த படையினர் இவ் ஆண்மக்களை கிளவிதோட்டம் பிள்ளையார் கோவிலடிக்கும் விக்கினேஸ்வராப் பாடசாலைக்கும் அழைத்து வந்து அடையாள அட்டைகளை சோதனை செய்தபின் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இச் சுற்றி வளைப்பு நேற்று காலை 6மணிமுதல்காலை10 மணிவரை நடைபெற்றது இத் தேடுதல் சம்பவத்தின் போது போக்கு வரத்துதடைபட்டிருந்தமையால்பஸ்பிரயாணிகள பெரிதும் கஷ்டமடைந்ததாகவும் தெரிவிக்கப் படுகிறது. (வ-52-41)

## புலிகள் சூட்டில் சிப்பாய் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கிரான்பால வாவிப்பகுதியில்அமைந்துள்ள இராணுவக் காவலரண மீது நேற்று நண்பகல் விடுதலைப் புலிகள மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் ஒரு இராணுவ சிப்பாய் பலியானார்.

இத்தாக்குதல் சம்பவத்தை யடுத்து, படையினர் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் வாவியில் மீன் பிடித்துக கொண்டிருந்த குடும்பஸ்தர் எஸ் .கந்தசாமி (வயது 55) என்பவர் படுகாயமடைந்த நிலையில். சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ

## திருமலையில் இன்று பகிஷ்கரிப்பு

(திருகோணமலை)

யாழ்பலகலைக்கழக மாணவனும்மாணவர்ஒன்றியத்தின் முன்னாள் செயலாளருமான கி. திவ்வியனை விடுவிக்கக் கோரியும் காலவரையற்று மூடப்பட்டுள்ள யாழ்பல்கலைக்கழகத்தைத் திறக்கக் கோரியும இன்றுதிருமலையில் பாடசாலை மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். (வ)

---


மங்கையர் மனமயங்கும் தங்கநகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
**மகாநதி ஜுவல்லறி**
72A, கஸ்தூரியார் வீதி, (கி-2040) யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை "வலம்புரி" அஸ்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது